
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 30.00
දිනමුරසු වාරමලර්
மார்ச் 15-21, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 954



## அமெரிக்காவின் தீர்மானம் குத்தி முறிந்தது கூட்டமைப்பு

## கச்சதீவுப் பயணம்
இறுதிப் பகுதி





## நேரு குடும்ப அரசியல் ஆட்டம் காணுகிறது?

## கல்முனையில் புதிய பிரதேச செயலகம் அவசியமும் நெருக்கடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான பிரேரணையை

# இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு



**ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள போர்க்குற்றம் தொடர்பான தீர்மானத்தை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது என்று இந்திய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் மக்களவை கூடியதும் தமிழக எம்பிக்கள் எழுந்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அப்போது நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி எழுந்து, ஐக்கிய நாடுகள் சபையில் பொதுவாக எந்த ஒருநாட்டுக்கும் எதிரான தீர்மானத்தையும் இந்திய அரசு ஆதரிப்பதில்லை என்று பிரணாப் முகர்ஜி பதிலளித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரேரணை குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இந்நிலையில் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு குறித்து முதல்வருக்குப் பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இருவழிப் பாதையாக மாற்றப்படும் கிளிநொச்சி

கிளிநொச்சி நகரின் இரண்டரைக் கிலோ மீற்றர் நீளமான ஏ-9 வீதி இருவழிப் பாதைகளாக புனரமைக்கப்பட்டு வருகிறது. ஏ-9 வீதியில் தற்போது அகலமாக்கப்பட்டு புனரமைப்பும் செய்யப்பட்டு வருகின்றது.

மாகாணத்திலுள்ள முக்கிய வீதிகள் சுமார் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அரசின் நிதி உதவியுடனேயே இந்த வீதிகள் புனரமைக்கப்படுகின்றன.

இதில் ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரை அண்டிய இரண்டரைக் கிலோமீற்றர் தூரம் இருவழிப் பாதைகளாகப் புனரமைக்கப்பட்டு வருவதுடன் நீர் வடிகாலமைப்புக் கால்வாய்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 153 கிலோமீற்றர் நீளமான கிராமிய வீதிகளிலும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### ஒழுக்கம் தவறும் பா.உ.களுக்கு சலுகைகள் குறைக்கப்படும்

#### சபாநாயகர் தெரிவிப்பு

ஒழுக்கம் தவறி நடக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகள் குறைக்கப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மைக் காலமாக பாராளுமன்ற உறுப்பினர் ஒழுக்கமின்றி செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒழுக்கம் தவறி செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைக் குறைப்பு தண்டனை விதிக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். வெளிநாட்டு விஜயங்கள், விசேட பாராளுமன்ற சலுகைகள், பாதுகாப்பு, வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் குறைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கமீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பாராளுமன்ற ஒழுக்காற்றுக் குழு பரிந்துரைகளை முன்வைக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அரசு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை

## பிரதமர் உறுதி



கல்வி அறிவை பெற்று வளர்ச்சி அடையாத சில நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு சென்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த பயங்கரவாதத்தை அழித்து மக்களை ஒரு நிம்மதியான வாழ்வுக்குள் கொண்டு வந்தது இந்த அரசு.

அது மட்டுமல்லாது, இராணுவத்தினரிடம் சரணடைந்த புலி உறுப்பினர்களுக்கு விரைவாக புனர்வாழ்வு அளித்து அவர்களுக்கு தேவையான வசதிகளையும் செய்து சமூகத்துடன் அவர்கள் நெருங்கி வாழக்கூடிய நிலைமையையும் இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இத்தகைய நிலையில் மேற்குலக நாடுகள் இலங்கை மீது கொண்டுவரும் குற்றச்சாட்டுகள் தேவை அற்றது இவ்வாறு எமக்கெதிராக கொண்டுவரப்படுகின்ற அழுத்தங்களை கண்டு அரசு அஞ்சப்போவதில்லை இந்த அழுத்தங்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தியின் பின்னடைவுக்கு யுத்தம் காரணமல்ல புறக்கணிப்பும் காரணம்

## மு.சந்திரகுமார் எம்.பி



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களின் அபிவிருத்தி பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமைக்கு கடந்த கால யுத்தத்தை மட்டும் காரணம் காட்டி விட முடியாது. அதற்கப்பால் கடந்த காலத்தில் இந்தப் பிரதேசங்கள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டமையும் ஒரு காரணம் அபிவிருத்தியில் கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களையே நாம் முன்னுரிமைப் படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று ஈபிடிபி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேச சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளி தருமபுரம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் இந்த மாவட்டத்தில் பல பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தப் பிரதேசத்தில் இந்த பாடசாலை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மிக விரைவில் முன்னெடுக்கப்படும். பிரதேசத்தின் முக்கியமான பாடசாலையாக தருமபுரம் மகாவித்தியாலயம் விளங்குவதால் இதன் பௌதிக வளத் தேவைகள் இயன்றவரை விரைவாக நிறைவு செய்யப் பட்டு நிறைவான கல்விச் செயற்பாட்டிற்கு வழிவகுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயம் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் முதற்கட்டமாக 400 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்படும் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்தாலும் அதற்கப்பால் இந்த பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றையும் அமைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் நிச்சயம் மேற்கொள்ளப்படும்.

தருமபுரம் பிரதேசத்தை மையமாக வைத்தே கண்டாவளைப் பிரதேசத்தின் அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் தர்மபுரம் அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி நிறைந்த பிரதேசமாகக் காணப்படும்.

அந்தவகையில் தருமபுரம் பிரதேசமும் எமது கவனத்தை ஈர்த்துள்ளது. அத்தோடு எம்மால் உறுதியளிக்கப்பட்டமைக்கு அமைவாக கல்மடுக்குளத்தின் கீழான நீர்ப்பாசனம் தருமபுரம், புளியம்பொக்கணைக் கிராமத்திற்கும் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்கள் அறிவித்துள்ளார். எனவே இந்த பிரதேச மக்களின் நீண்டகாலக் கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயா விஜயத்தை மத்திய அரசு தடுத்தது ஏன்?

"**கூடங்குளம்** போராட்டங்கள் நடைபெறும் பகுதிக்கு வருவதற்கு திட்டமிட்ட ஜப்பானிய பிரஜை ஒருவரின் விசாவை மத்திய அரசு ரத்து செய்தது ஏன்?" இந்தக் கேள்விக்கு சென்னை விமான நிலையத்தில் பதிலளித்த வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, "வேறு நாட்டவர்களில் யாரை இந்தியாவிற்குள் வர அனுமதியளிக்கலாம் என்ற முடிவு, நாட்டின் நலனைப் பொறுத்து மத்திய அரசால் எடுக்கப்படுகிறது" என்றார்.

கூடங்குளத்துக்கு வருவதற்கு திட்டமிட்ட ஜப்பானியப் பிரஜைக்கு விசா மறுத்தது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் மப்பாக பேச விரும்பவில்லை என்பது அவரது வார்த்தைகளில் இருந்து தெரிந்தது.

"வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு விசா வழங்குவது மத்திய அரசின் தனிப்பட்ட உரிமை. குறிப்பிட்ட ஜப்பானிய பிரஜைக்கு விசா மறுக்கப்பட்டதற்கான காரணத்தை பகிரங்கமாக தெரிவிக்க முடியாது. இந்த விஷயத்தில் வெளிநாடுகள் கூறும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது" என்பதுடன் அந்த விஷயத்தை முடித்துக் கொண்டார் அமைச்சர் கிருஷ்ணா.

கூடங்குளம் போராட்டத்தில் சமீப நாட்களாக வெளிநாடுகள் தொடர்பான சர்ச்சைகள் நடைபெறுவது அதிகமாகத் தொடங்கியிருக்கிறது.

கூடங்குளம் அணு மின் நிலையத் தொடங்கப்படாமல் தடுப்பதற்கான போராட்டங்களின் பின்னணியில், வெளிநாடுகள் உள்ளன என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருந்தார். அவர் மறைமுகமாக அமெரிக்காவை குற்றம் சாட்டினார் என அரசியல் ஆய்வாளர்கள் கூறினர்கள்.

இதே விவகாரத்தில், நாகர்கோவில் பகுதியில் தங்கி இருந்த ஜேர்மன் பிரஜை ஒருவர் நாடு கடத்தப்பட்டார்.

கூடங்குளம் போராட்டத்துக்காக வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெறுவதாக 4 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இப்போது, கூடங்குளம் வருவதற்கு திட்டமிட்ட ஜப்பானியப் பிரஜைக்கு விசா மறுத்த விவகாரம்.

இதில் தொடர்புடைய ஜப்பானியப் பிரஜையின் பெயர் மாயா கொபயாஷி. ஜப்பானில் ஃபுகுஷிமா பகுதியைச் சேர்ந்தவர். அந்தப் பகுதியில் ஏற்பட்ட அணு ஆலை விபத்து தொடர்பாக தமது அனுபவங்களை, கூடங்குளம் மக்களிடையே எடுத்துச் சொல்ல வருவதாகவே திட்டமிடப்பட்டிருந்தது. 'கிரீன் இந்தியா' என்ற அமைப்பு இவரது விஜயத்துக்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

அதை வேறுவிதமாகச் சொன்னால், அணு ஆலை எதிர்ப்பு பிரசாரம் செய்ய ஜப்பானில் இருந்து வரவிருந்தார். அந்த பிரசாரத்தை தான் உள்நாட்டில் செய்கிறார் உதயகுமார்.

டோக்கியோவில் உள்ள இந்திய தூதரகம், முதலில் மாயாவிற்கு விசா வழங்கியிருந்தது. பின் திடீரென அந்த விசா ரத்து என்று தெரிவித்து விட்டது.

டோக்கியோவில் உள்ள இந்திய தூதரக அதிகாரி மஞ்சுசை பாண்டாவிடம் இது தொடர்பாக கருத்து கேட்டபோது, "மாயா பிஸினெஸ் விசா ஒன்றுக்காக விண்ணப்பித்திருந்தார். நாமும் வழங்கியிருந்தோம். அதன்பின், அவர் செல்லும் நோக்கம் வேறு என்று தெரிய வந்ததால், விசாவை கேன்சல் செய்து விட்டோம்" என்று தெரிவித்ததுடன் நிறுத்திக் கொண்டார்.

அரசின் திட்டத்துக்கு எதிராக பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதி கோரினால், அதை மறுப்பது, கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் நடைமுறையில் உள்ள பிரக்டிஸ்தான்.

விவகாரம் புரியாமல் டோக்கியோவில் உள்ள இந்திய தூதரகம் முதலில் விசா கொடுத்துவிட்டது. பின்னர் டில்லியில் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விசாவை ரத்து செய்துவிட்டது என்று ஊகிக்கலாம்.



ரிஷி



# புலிகளின் வதை முகாமில்

மணியம்

அதிர்ச்சித் தொடர் வதை 02

**புலிகளால்** நான் 1991 டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி கைது செய்யப்பட்டு, 1993 ஜுலை 26ஆம் திகதி வரை (சுமார் ஒன்றரை ஆண்டுகள்) அவர்களது வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டேன். அவர்கள் 'கருணை'யுடன் என்னை விடுதலைசெய்திராவிட்டால், இன்று நான் உங்களுடன் எனது கருத்துகளைப் பகிர்வதற்கு வாய்ப்பே இருந்திருக்காது. அவர்கள் என்னை விடுதலை செய்ததை எனது இரண்டாவது பிறப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

எனது புலிகள் பற்றிய அனுபவங்கள் அவர்களின் கொடூரமான உருவத்தின் ஒரு வெட்டுமுகம் மட்டுமே. அதாவது 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல. அவர்களுடைய உண்மையான கோர முகத்தை வெளிப்படுத்த இது போதுமானதல்ல. அதனை முழுமையாகக் கொண்டுவருவதாக இருந்தால், அவர்களால் சித்திரவதைகளுக் குள்ளாக்கப்பட்டு, ஏதோ சில காரணங்களால் தப்பிப் பிழைத்து வெளியே வந்து, தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இன்னமும் பயத்துடன் முகம் காட்டாது வாழும் நூற்றுக் கணக்கான முன்னாள் கைதிகள் முன்வர வேண்டும். அது அவர்கள் தமிழ் சமூகத்துக்கும், மனித குலத்திற்கும் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

எனது புலி வதை முகாம் அனுபவங்கள், அது ஏற்பட்டு 18 வருடங்கள் தாமதமாக வெளிவருவதற்கு காரணங்கள் உண்டு. நான் விடுதலையாகி வெளியே வந்ததும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வந்த எனது ஆத்ம தோழர்களும், நண்பர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும், வேறு பல சமூக அக்கறையாளர்களும், நான் புலிகளின் இரும்புப் பிடியின் கீழ் இருந்த போது பட்ட அவலங்களின் துன்பங்களின் அனுபவங்களை எழுத்தில் கொண்டு வந்து உலகின் முன் வெளிச்சத்தில் வைக்கும்படி தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர். ஆனால் 1995இல் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியடிக்கப்படும் வரை, நான் அவர்களது தீவிர கண்காணிப்புக்குள் இருந்ததினால், அந்தச் சூழ்நிலையில் எனது சுண்டுவிரலைக் கூட அவர்களுக்குத் தெரியாமல் அசைக்க முடியவில்லை.

1999இல் நான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி கொழும்பு சென்ற பின்னரும்கூட, அவர்களது வேவுக்கண்கள் என்னைப் பின்தொடர்ந்த வண்ணமே இருந்தன. மீண்டும் நான் அவர்களது தீவிர கண்காணிப்பு வட்டத்துக்குள் படிப்படியாகக் கொண்டுவரப்படுகிறேன் என்று உணர்ந்த நிலையிலும், தவிர்க்க முடியாமலும், மனம் விரும்பாத நிலையிலும், எனதும் எனது குடும்பத்தினதும் பாதுகாப்புக் கருதி நான் நாட்டை விட்டு 2004 டிசெம்பர் 04ஆம் திகதி வெளியேறினேன். நான் புலம்பெயர்ந்து குடியேறிய நாட்டிலும்கூட புலிகளின் மரண நிழல் என் போன்றவர்கள் மீது படிந்து கொண்டே இருந்தது. அதனால் வெளிநாட்டுக்குத் தப்பி வந்தும்கூட, கடந்த 6 வருடங்களாக ஓரளவு ஒதுங்கி மறைந்து வாழ வேண்டியே இருந்தது. இப்பொழுது புலிகள் தாயகத்தில் பெரும்பாலும் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விட்ட நிலையிலும் கூட, இன்றும்கூட அவர்கள் வைத்திருக்கும் பரவலான சர்வதேச வலைப் பின்னல் காரணமாக, அந்தப் பாசிஸ்ட்டுகளுக்கு எதிரானவர்களுக்கு உலகின் எந்த மூலையிலாவது பூரண பாதுகாப்பு உள்ளது என்று சொல்ல முடியாது.

இருப்பினும் எமக்குள்ள வரலாற்றுக் கடமையை ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் நாம் நிறைவேற்றியே தீர வேண்டும். இது வரலாறு எமக்கு இட்ட கட்டளையாகும். தவறுவோமாக இருந்தால், அது எமது மக்களுக்கு நாம் செய்யும் துரோகமாகும். அதற்காக சில துன்பங்கள் ஏற்படினும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். அந்த உணர்வின் காரணமாகவே நான் இத்தொடரை எழுத எண்ணினேன்.

நான் இதை எழுதும் போது உண்மையுடனும் சத்தியத்துடனும் அணி வகுத்துச் செல்லவே எப்பொழுதும் விரும்புகின்றேன். புலிகள் என்னைக் கைது செய்ததனால்தான் நான் அவர்கள் மீது கோபம் கொண்டு இதை எழுதுகிறேன் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் மறுபக்கமாகப் பார்த்தால் நான் ஏதாவதொரு வகையில் அவர்களது தீய செயற்பாடுகளை எதிர்த்ததாலேயே, அவர்கள் என்னைக் கைதுசெய்து சித்திரவதைக்குட்படுத்தினர் என்பதே உண்மையாகும்.

அந்த வகையில் பார்த்தால் மனிதகுல விரோதிகளான புலிகள் எனக்கு பெருமைக்குரிய கௌரவத்தை வழங்கியுள்ளனர் என்றே கூற வேண்டும். (தொடரும்)



இது வன்னியில் புலிகளின் சிறைச்சாலையின் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவால் பாதிப்பா?

மது போதையில் மூழ்கியவரும் செக்ஸ் போதையில் மூழ்கியவரும் மீள்வது கடினம். உண்மை நிலை இப்படியிருக்கும்போது செக்ஸ் போதையை அதிகரிக்க மது போதை உதவுவதாக கருதுவது அறியாமை.

போதைப்பழக்கம் காலங்காலமாய் நீடிக்கிற ஓர் சமூகக்கேடு. முன்னைய காலத்தில் பலவித போதையூட்டும் பானங்களும் போதையற்ற பானங்களும் நிரம்பி வழிந்துள்ளன. ஏராளமான மக்கள் மது பானங்களை பெருமளவு பருகியதால் அரசாங்கமே சாராயத் தொழிலைத் தொடங்குவதற்கு இட்டுச் சென்றது என்று கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் கூறுகிறது.

போதையை உட்கொண்டால் செக்ஸ் உறவுநேரம் அதிகரிக்கும் என்ற தவறான கருத்துடன் பலரும் போதையில் ஈடுபடுகிறார்கள். போதைக்கும் செக்ஸுக்கும் சம்பந்தமில்லை. அதுமட்டுமல்ல தொடர்ந்து போதைப்பழக்கம் நீடித்தால் விந்தணுக்கள் குறையும், வீரியம் குறையும், முழுமையான ஆண்மைக்குறைவில் போய் முடியும்.

# தலையணை மந்திரம்!

**இரவு** நேரத்தில் படுக்கையறையில் தம்பதியர் பேசும் தலையணைப் பேச்சு அவர்களிடையே ஆரோக்கியமான உறவினை மேம்படுத்துகிறது என்று சமீபத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இது தொடர்பான ஆய்வு மேற்கொண்டனர். தம்பதியர் உறங்கும் முன்பாக தலையணையில் படுத்துக் கொண்டு உரையாடுவது, அவர்களிடையே ஒருவித பாதுகாப்பு உணர்வினை ஏற்படுத்துகிறதாம். குறிப்பாக தாம்பத்ய உறவிற்கு சிறந்தை இந்த பேச்சு தம்பதியரிடையே பிணைப்பை அதிகரிக்கிறது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக 456 பேரிடம் கேள்விகள் கேட்கப்பட்டது. ஆய்வை மேற்கொண்ட டாக்டர் டேனியல், தம்பதியரின் படுக்கையறைப் பேச்சு உளவியல் ரீதியாக பல நன்மைகளை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளார். குறிப்பாக மனைவி கர்ப்பிணியாக இருக்கும் போது படுக்கையறையில் ஆறுதலாக பேசுவது மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறதாம். இது தாய்க்கும், சேய்க்கும் ஆரோக்கியமானது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்பதியரிடையே தாம்பத்ய உறவு என்பது அவசியமானதாக இருந்தாலும் அதையும் தாண்டி இரவு பொழுதில் தலையணையில் படுத்தவாறு பேசுவது ஆத்மார்த்தமான உறவை ஏற்படுத்துகிறதாம். எனவே தம்பதியர் நினைத்தோறும் பேசுங்கள்.

ஆண்-பெண் இருவருமே உள்ள பணிச்சுமை, அழுத்தம் காரணமாக படுக்கையறையில் பேசுவதை அவர்கள் தவிர்த்து விடுகின்றனர். இருப்பினும் படுக்கையறையில் உரையாடுவது ஆய்வுகளின் வெற்றிக்கும் அடித்தளமாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# பாலியல் மொழிகள்



உடல்மொழி என்பது அங்க அசைவுகள் குறிப்பிடும் முகத்திறமையை குறிக்கும் சொல். இலைகள் மனிதர்கள் உட்பட உயிரினங்களில் பலவற்றிலும் நடக்கும். இப்படிப்பட்ட அமைதியான மொழிகள் காம உணர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. அங்க அசைவுகள், பார்வைகள், இமை முணுமுணுப்புகள் இப்படி இவற்றின் பட்டியல் நீண்டுக் கொண்டே செல்கிறது.

நாக்கை மேலுதட்டின் மேல் சுற்றி அசைத்தால் அது பாலியல் விருப்பத்துடைய அடையாளமாக கருதப்படுகிறது. கை குலுக்கும் போது விரலினால் மற்ற நபரின் உள்ளங்கையில் சுரண்டினால் அதுவும் பாலியல் தொடர்புக்கான குறிப்பீடு என்று கருதப்படுகிறது. ஒரு நபரின் கையில் தொடர்ந்து மூன்று முறை அழுத்தினால் நான் உன்னைக் காதலிக்கிறேன் என்ற பொருளாகுமாம்.



# ஆணின் வேகம்

இளமையில் ஆணுக்கு வேகமும் கொண்டதாக செக்ஸ் இருக்கிறது. எளிதில் தீ பற்றிக் கொண்டு வெடித்துச் சிதறி அடங்கி விடும் மத்தாப்பு போன்றது அது. 20 வயதுகளில் இருக்கும் வாலிபன் உடலுறவு தொடங்கிய 2 நிமிடத்திலிருந்து 5 நிமிடத்திற்குள் உச்சகட்ட இன்பத்தை தொட்டு நின்றுவிடுகிறான். ஆனால் அந்நிலையில் பெண் முழுமையாக வேட்கையுடன் மேலும் உறவுக்கு ஏங்கி நிற்பாள்.

ஆனால் நடுவயதில் கணவன் இயல்பாகவே மெதுவாக, நிதானமாக செயல்பட்டு தனது மனைவியுடன் சமமான உறவில் அதிக நேரம் நிலைத்திருக்கிறான். சிகாகோ பல்கலைக்கழக ஆய்வறிக்கையின் படி 20 வயதுகளில் இருக்கும் பெண்கள் பெரும்பாலானோர் உச்சகட்ட சிலிர்ப்பு நிலையை அடைவதில்லை என்றும் 40 வயதுகளில் இருக்கும் பெண்களே அதிகமாக அந்நிலையை அடைகின்றனர் என்றும் தெரிகிறது.

மனைவியைச் சிலிர்ப்பு நிலைக்குக் கொண்டு போவதில் ஆர்வம் காட்டும் கணவன் இயல்பாகவே தானும் அந்தப் பரவசத்தை அடைகிறான். கவர்ச்சியைக் கண்ணால் கண்டாலே இளமைப் பருவம் மோகவயப்படும்; வயது முதிரும் போது மோகத்திற்கு பார்வை மட்டும் போதுமானதாக இருப்பதில்லை. தொடு உணர்ச்சிகளே அந்நிலைக்குத் தூண்ட முடியும். எனவே தான் இவ்வயதுகளில் நிதானமும் செயல்திறனும் இல்லறத்தில் உதவியாக இருக்கிறது. இளமைக் காலத்தில் உறவுக்கு அழைப்பதில் ஆண்தான் முன்கை எடுக்கிறான். ஆனால் நடுவயதில் பெண்தான் ஆர்வம் மிகுந்தவளாக இருப்பாள்.

காரணம் ஆண், பெண் இருவர் உடலிலும் சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் மற்றும் டெஸ்டோஸ்டிரோன் திரவங்கள் வயது கூடும்போது மாற்றமடைகின்றன.

ஆணுக்கு இவையிரண்டும் அளவில் குறையத் தொடங்கும். ஆனால் பெண் உடலில் டெஸ்டோஸ்டிரோனின் குறைவை ஈஸ்ட்ரோஜன் சரிகட்டுகிறது. எனவேதான் ஆணை விடவும் பெண் நடுவயதில் அதிக ஆர்வம் கொண்டவளாக இருக்கிறாள்.



# இயற்கை வயகரா



வயகரா! வயகரா! வயகரா!!! இந்த வார்த்தை உலக நாடுகள் அனைத்திலும், உலக மக்கள் அனைவருக்கும் தெரிந்த வார்த்தை. திடீரென்று உடனடி நடவடிக்கையாக உணர்ச்சி நரம்புகளைத் தூண்டி, காமத்தை அனுபவிக்க உதவும் ஒரு மருந்தின் பெயர். இவ்வயகரா மாத்திரைக்கு எவ்வளவு அதிக வேகமும், அதிக சக்தியும் உள்ளதோ அவ்வளவு வேகமாக மனிதனின் ஆரோக்கியத்தை அழிக்கும் சக்தியும் உண்டு என்பதும் உண்மை.

வருங்காலத்தில் மருத்துவ உலகம் ஆராய்ந்து, அனுபவித்த பின் வயகராவிற்குத் தடை விதிக்காமல் இருக்க முடியாது என்பதும் உண்மை. முருங்கையும், மூலிகையும் வயகராவை விட இரண்டல்ல பத்தல்ல, ஆயிரம் மடங்கு சிறந்தவை, உயர்ந்தவை, உகந்தவை. ஆயிரம் முறை போகம் (உடலுறவு) செய்தாலும், உடற்கட்டு சிறிதும் குலையாமல் இருந்ததால் பழனி சித்தருக்கு போகர் என்ற பெயர் வந்தது. இவர் சீனா சென்று பல ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். அந்நாட்டிலும் அவருக்கு (போகர்) என்றே பெயர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

மூலிகைகள் உண்டு அதிக போகத்தில் (உடலுறவில்) ஈடுபட்டதால் போகர் என்றே பெயர் பெற்றார். அவர் சொன்ன மூலிகைகளில் முருங்கை எப்படி வயகரா போல் வேலை செய்கிறது என்பதைப் பார்ப்போம். முருங்கையின் அனைத்து உறுப்புகள் மற்ற மருந்துப் பொருளோடு சேர்ந்தால் வயகராவை விட பன்மடங்கு பயனளிக்கிறது.

64 கலைகளில் பாலுறவு என்னும் காமசூத்திரக் கலையும் ஒன்று. மிக உயர்ந்த உன்னதக் கலையை மிருகங்கள் ஒன்றோடொன்று இணைந்து தன் உடலிச்சையைத் தீர்த்துக் கொள்வதுபோல் அனுபவிப்பதில் பயனில்லை.

மனிதனும் வயகரா மருந்துண்டு 10 நிமிடம் மிருகவெறியுடன் புணர்ச்சியில் ஈடுபட்டால் மிருகத்திற்கும், மனிதனுக்கும் வேறுபாடில்லை. சிலை, சிற்பம், சித்திரங்களில் உள்ளது போன்று நூற்றுக்கும் மேற்பட்ட வித விதமான வகைகளில் மாற்றி மாற்றி உடலுறவு சுகங்களை அனுபவிக்கும் போதுதான் மனிதனின் ஐம்பொறிகளின் உணர்வுக்கும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவைகளால் ஈர்க்கப்பட்டு, உடலுக்கும், மனத்திற்கும் பல்விதமான சுவைகளைச் சுவைத்து, உள்மனம் என்ற உயிர் ஜீவன் ஏகாந்த நிலையையும், இன்பத்தையும் அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாத வார்த்தைகளுக்கு நீ எஜமான். பேசிய வார்த்தை உனக்கு எஜமான்.

அரபிய பழமொழி

## வாரம் ஒரு திருக்குறள்



### அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை அல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்கநெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.

குறள்: 181



# ஆணவம்

ஒரு தென்னை மரத்தில் காகம் ஒன்று அமர்ந்து, "கா, கா..." என்று உற்சாகமாகக் கத்திக் கொண்டிருந்தது. காகத்தின் அருகே ஒரு பஞ்சவர்ணக்கிளி சென்று அமர்ந்தது.

"என்ன காக்கையாரே! உமது இறக்கையைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்புதான் வருகிறது. இவ்வளவு அழகில்லாத அருவருப்பைத் தரக்கூடிய இறக்கையை நீர் பெற்றிருக்கிறீரே... உமக்கு வெட்கமாக இல்லையா?" என்று கிளி ஏளனமாகக் கேட்டது.

"நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? கறுப்பு நிறம் சிறப்பானதுதான். மற்ற நிறங்கள் எவ்வளவு உயர்ந்தவை என்பதை ஒப்பு நோக்கிப் பார்ப்பதற்காகத்தான் கறுப்பு நிறத்தைக் கடவுள் உண்டாக்கியிருக்க வேண்டும். இப்போது எனது இறக்கையால் உமது இறக்கையின் அழகு சிறப்பு பெற்று பளிச்சென்று தெரிகிறது அல்லவா?" என்று தன் இறகின் அழகைத் தானே பாராட்டிக் கொண்டது காகம்.

அந்தச் சமயத்தில், ஒரு புறா அந்தப் பக்கமாக வந்து அவர்கள் அருகே அமர்ந்தது. "என்ன... நீங்கள் இரண்டு பேரும் ஏதோ சர்ச்சையில் ஈடுபட்டு இருக்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்று கேட்டது.

"நல்ல நேரத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். எங்கள் இருவருடைய இறக்கையின் அழகையும் பாருங்கள். எங்கள் இருவரில் யாருடைய இறக்கை அழகாக இருக்கிறது? நீங்களே தீர்ப்பளியுங்கள்!" என்று புறாவைக் கேட்டுக் கொண்டது பஞ்சவர்ணக்கிளி.

உண்மையில் கொஞ்சம்கூட அறிவுக்குப் பொருந்தாத சர்ச்சை இது. கடவுள் உலகத்தில் உயிரினங்களுக்கான எந்த உறுப்பையும் பயன் இல்லாமல் சிருஷ்டிப்பதில்லை. ஒவ்வொருவருடைய உடல் உறுப்புகளும் ஒவ்வொரு வகையில் சிறந்தனவாக, அழகான வைகளாகவே இருக்கும். பஞ்சவர்ணக்கிளியே... உனது இறக்கை, பார்க்க அழகாக இருக்கலாம்.

ஆனால், காகம் போன்று அவ்வளவு வேகமாகவும், ஒரே சமயத்தில் நீண்ட தூரம் பறக்கவும் உன்னால் முடியாது. கோடை நாளில் உன் இறக்கைகள் உனக்கு அதிகப் பயன் தருவதாக இருக்கக்கூடும். குளிர், மழைக் காலத்திலோ, காக்கையின் இறக்கைகள் தாம் மிகவும் பயனுடையதாக இருக்கும். உயிரினங்களின் உறுப்பு அழகைப் பற்றி மட்டுமே பேசக்கூடாது.


### பாப்பா முரசு சிறுகதை

"அவற்றின் பயன் பற்றித் தான் பேச வேண்டும். பயன் இல்லாதவை என்று உலகத்தில் எதுவுமே இல்லை. அவ்வாறு பயன் உள்ள உறுப்புகளை நமக்கு அளித்தமைக்காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்!" என்று புறா கூறிற்று. அதைக் கேட்டதும் புத்தி தெளிந்து தன் ஆணவத்தை விட்டொழித்தது பஞ்சவர்ணக்கிளி.

## ஒலிப்பதிவு

நாம் அனைவரும் தினமும் இன்னிசை தரும் பாடல்களை ரசித்து கேட்டு மகிழ்கிறோம். இதை நாம் அனுபவிக்க காரணம், ஒலிப்பதிவு முறைதான். அதனால்தான் பல்வேறு காலகட்டங்களில் வெளியான பாடல்களையும் நாம் ரசித்து கேட்க முடிகிறது. இன்று இதற்கான சாதனங்கள் எம்பி3, ஐபேட் என்று பல்வேறு விதங்களில் அபரிமிதமாக வளர்ச்சி அடைந்துள்ளது. ஆனால், முதன் முதலில் எப்படி ஒலிப்பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா? இந்த ஒலிப்பதிவு முறையை முதலில் கண்டறிந்தவர், தோமஸ் அல்வா எடிசன். இவர் 1878இல் போனோகிராப் என்ற ஒருவகையான ஒலிப்பதிவு கருவியைக் கண்டறிந்தார். இந்த கருவியை கையால் சுற்றி தான் இயக்க வேண்டும்.






பட்டு, பருத்தி நூல்களுக்குப் பதிலாக கண்டறியப்பட்ட செயற்கை இழை தான் ரேயான். இன்றும் ஆடைத் தொழிலில் பயன்பட்டு வரும் ரேயான் இழைகள் இயற்கையான செல்லுலோசில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

## செயற்கை நூல்

ரேயான் தாவரங்களில் தான் இருக்கின்றது. அதில் இருந்து செல்லுலோஸ் பிரித்தெடுக்கிறார்கள். அதன்பின், அதை வேதிப்பொருள் மூலமாக கரைக்கிறார்கள். பின்பு அதை இழைகளாக மாற்றுகிறார்கள். செல்லுலோஸ் இயற்கையாகவே தாவரங்களில் இருக்கும். அதனால், ரேயானை முழுமையான செயற்கை உற்பத்தி என்று சொல்ல முடியாது. நைலோன் இழைகளைத் தான் அப்படி சொல்ல முடியும். 1929இல் டாக்டர் எச்.கரோதேர்ஸ் என்ற அமெரிக்க விஞ்ஞானியின் தலைமையில் ஒரு குழு தான் இந்த நைலோனைக் கண்டுபிடித்தார்கள். இது 1938இல் இருந்து ஆடை தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.



## ஹிட்லரின் பேச்சாற்றல்



பேச்சாற்றல் என்பது பீரங்கி மாதிரி. அது சரிவரக் கையாளப் பெறாதவனின் செயல், புன்மொழிதனைக் கொளுத்தி விட்டு, எதிரியை பயமுறுத்த நினைப்பது போலக் கேலிக்கூத்தாகி விடும்.

ஒரு இறப்பர் ஸ்டாம்ப் கூட இல்லாத அரசியல் கட்சியில் நுழைந்து எனது பேச்சாற்றல் மூலமாக நான் ஜேர்மன் ஆட்சியைப் பிடித்தேன் என்றார் ஹிட்லர்.

## முழுமைப்படுத்துங்கள்


எண் களை வரிசைப்படி, இணைத்து படத்தை முழுமைப்படுத்துங்கள்.

# பாப்பா முரசு




### வாரம் ஒரு நாடு

## ஹைதி



**தலைநகர்:** போர்ட் ஓ பிரின்ஸ்
**பரப்பளவு:** 27 ஆயிரத்து 751 சதுர கிலோமீற்றர்
**மக்கள் தொகை:** ஒரு கோடியே 33 ஆயிரம்
**நாணயம்:** கவுர்டே. **மதம்:** கிறிஸ்தவம்
**மொழி:** பிரெஞ்சு, கிரியோல். **எழுத்தறிவு:** 52.9 சதவீதம்
**அமைவிடம்:** அட்லாண்டிக் கடலின் மேற்கில் உள்ள கியூபாவிற்கும், கிழக்கில் உள்ள போர்டோரிகாவிற்கும் இடையில் ஹிஸ்பானியோலா என்ற தீவு அமைந்துள்ளது. அதன் மேற்குப் பகுதியில் மூன்றில் ஒரு பங்கு பரப்பளவில் ஹைதி உள்ளது.
**விளைபொருட்கள்:** கோப்பி, சீனி, வாழை, அரிசி, கொக்கோ, புகையிலை, பருத்தி.
**தொழில்கள்:** சீனி ஆலை, துணி நெசவு, சீமெந்து, ரம், மது வகைகள் தயாரித்தல். அலுமினியத்தின் முக்கிய தாதுவான பாக்சைட் இங்கிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. சுற்றுலாத்துறை மிகவும் முக்கியமான வருவாய் ஈட்டித்தரும் தொழிலாக உள்ளது.

## தனக்குத்தானே பேசுவது ஏன்?



சிலர் நடந்து செல்லும்போதே தனக்குத் தானே பேசுவார்கள். அவர்கள் ஏதோ ஒன்றை முணுமுணுப்பது போல் இருக்கும். மனதிற்குள் உள்ள குறைகளையும், இச்சைகளையும் குறைப்பதற்காகவே இப்படி தனக்கு தானே பேசுகிறார்கள்.

இது சம்பந்தமாக செக்காவ் என்ற எழுத்தாளர் ஒரு சிறுகதையை எழுதியிருக்கிறார். அதில், ஒரு குதிரை வண்டிக்காரனின் மகன் திடீரென்று இறந்துவிடுகின்றான். அவன் தன் மகன் இறந்த சோகத்தை பார்க்கின்றவர்கள் யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று முயற்சி செய்கின்றான். ஆனால், யாரும் கேட்கவே இல்லை. ஏனென்றால் எல்லோருக்கும் வேலை... வேலை...! அவ்வளவு வேலை. அதனால், அவர்கள் யாருக்கும் பொறுமையாக கதை கேட்கும் அளவுக்கு நேரமே கிடைக்கவில்லை. யாரிடமாவது சொல்லியே ஆகவேண்டுமே? என்ன செய்வது என்று கடுமையாக யோசித் தான். உடனே, தன்னுடைய குதிரையிடம் அவனது சோகத்தைப் பற்றி விவரமாக சொல்கின்றான். குதிரை பாவம் அதுக்கு என்ன தெரியும்?

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டிய பத்துபேருக்கு பரிசுகள் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசி திகதி 30.03.2012

வர்ணம் தீட்டும் போட்டி இல.933
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:187, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 930**

**பரிசுக்குரியவர்:** மதுஷா, பல்வைராயன்கட்டு, பூநகரி.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. ச.தஸ்மினா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
02. செ.தயாளா, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
03. போ.சஜாஷினி, அரசாலைதெற்கு, சாவகச்சேரி.
04. சிவதாங்கி, காரைநகர், யாழ்ப்பாணம்.
07. எஸ்.மதுனி, வாழைச்சேனை, மட்டக்களப்பு.
08. து. ஆதித்தன், பளை.
09. எஸ்.மகிந்தன், பேசாலை, மன்னார்.
10. க.கஜானன், நெட்டாளா, விசுவமடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களை மரணிக்காமல் வாழவைக்க முயற்சி

இறக்காமல் தொடர்ந்து வாழ பலருக்கு பிடித்திருக்கும், பிறந்தவர்கள் அனைவரும் ஒருநாள் இறந்தே ஆகவேண்டும் என்ற நியதியில் இருந்து இதுவரை யாராலும் தப்ப முடியவில்லை. ஆனால் முடியும் என்று சொல்கிறார் 31 வயதாகும் இட்ஸ்கோட் என்ற இளைஞன். இவர் அவதார் என்ற பெயரில் ஒரு திட்டத்தை தீட்டியிருக்கிறார். எண்ணவோட்டம் செயற்கையாக [illegible] குறித்து மனிதனின் எண்ணங்களை மாற்றிவிடுவதுதான். இதற்கான ஆராய்ச்சியில் சுமார் 100 விஞ்ஞானிகளை ஈடுபடுத்தப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆராய்ச்சிக்காக அமெரிக்க இராணுவத்தின் Defense Advance Research Projects Agency உடன் சேர்ந்து பணியாற்ற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். தனது கணிப்பின்படி இத்திட்டத்துக்கு 10 ஆண்டுகள் பொறுமையும் தேவைப்படுகிறது. இது நடைமுறைக்கு சாத்தியப்படுமா, இல்லை கனவுக்கு மட்டும்தானா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.



# அடிமையாக்கும் ஐஸ்கிரீம் ஆசை

பார்க்கும் போதெல்லாம் ஐஸ்கிரீம் சாப்பிடுபவரா நீங்கள். எச்சரிக்கையாக இருங்கள். மது, கோகைன் போதைப்பொருள் போல ஐஸ்கிரீமும் உங்களை அடிமையாக்குகிற ஆபத்து இருக்கிறது என்கின்றனர் விஞ்ஞானிகள். உணவு பழக்கம் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக அமெரிக்காவின் ஓரிகன் மாநில ஆய்வுக்கழக பேராசிரியர் கைல் பர்கர் தலைமையில் சமீபத்தில் ஒரு ஆய்வு நடந்தது. இதுபற்றி பர்கர் கூறியதாவது: பலர் மது குடிக்கிறார்கள் [illegible] அடிமையாகிறார்கள். இந்த போதையூட்டக் காரணம் மூளையின் திருப்தித்தன்மை. ஆரம்பத்தில், கொஞ்சம் குடித்ததுமே போதும் என்ற உணர்வு ஏற்பட்டுவிடும். நாளடைவில், சற்று அதிகம் குடித்தால்தான் இந்த திருப்தி உணர்வு ஏற்படும். இதுதான் லிமிட் என்று தீர்மானித்து நிறுத்துபவர்கள் தப்பிவிடுகின்றனர். அந்த திருப்தித் தன்மையுடன் மல்லுக்கட்டுபவர்கள் மேலும் மேலும் குடித்து அடிமையாகின்றனர். மது, கோகைன் மட்டுமல்ல. தொடர்ந்து சாப்பிட்டால் ஐஸ்கிரீமுக்கும் அடிமையாகி விடும் அபாயம் இருக்கிறது. கொழுப்பு சத்து, சீனி அதிகம் உள்ள ஐஸ்கிரீம் போன்ற உணவுப் பொருள்களை தொடர்ச்சியாக சாப்பிடும்போது, மூளையின் திருப்தித்தன்மையில் மாற்றம் உண்டாகிறது. ஐஸ்கிரீமை மூளை அடிக்கடி எதிர்பார்க்கத் தொடங்கும். இது ஏறக்குறைய, கோகைன் போன்ற போதைப்பொருளுக்கு அடிமையானவரின் மனநிலை ஆகும்.



இவ்வாறு கைல் பர்கர் கூறினார். தொடர்ச்சியாக 'ஜங்க் புட்' சாப்பிடுவதால் அதற்கு அடிமையாகும் ஆபத்து இருப்பதாக ஏற்கனவே நடந்த ஆராய்ச்சிகளில் தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

# வெயிலில் உடல் சூட்டை தவிர்க்க

தினமும் எட்டு டம்ளர் தண்ணீர் குடிப்பது அவசியம். பழச்சாறுகள், இளநீர், நுங்கு, தர்ப்பூசணி, வெள்ளரி, கொய்யா ஆகியவற்றை சாலடாக உணவுக்குப் பின்னர் எடுத்துக் கொள்ளலாம். தண்ணீர்க்காய்கள் புடலங்காய், பீர்க்கன், சுரைக்காய், கீரை வகைகள், பழ வகைகளும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தயிர், மோர் மற்றும் வெண்ணெய் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம்.

ஊற வைத்த வெந்தயம் அல்லது வெந்தயப் பொடி இதில் ஏதாவது ஒன்றை காலை நேரத்தில் எடுத்துக் கொள்வதன் மூலம் உடல் சூட்டைக் குறைக்கலாம். வெஜிடபிள் சாலட், ரசம் ஆகியவற்றில் பயன்படுத்தலாம்.

அதிக நார்ச்சத்து மற்றும் கொழுப்பு உணவுகளை தவிர்க்கவும். அதிக மசாலா, அசைவ உணவுகள் மற்றும் எண்ணெய்ப் பதார்த்தங்களைத் தவிர்ப்பது நல்லது. கீரை, சர்க்கரை, பேரிச்சை, பால், முட்டை ஆகியவற்றை எடுத்துக் கொள்வதன் மூலம் வெயிலில் இழந்த சக்தி உடலுக்கு கிடைக்கும்.

கறிவேப்பிலையைப் பொடி செய்து மிளகு, சீரகம், வேர்க்கொம்பு ஆகிய வற்றை சமஅள வில் எடுத்து சாப்பிடுவதால் வெயில் காலத்தில் உண்டாகும் மயக்கங்கள் சரியாகும்.

சீரகம், வேர்க்கொம்பு, ஏலம், நெல்லிமுள்ளி ஆகியவற்றை சம அளவில் எடுத்துப் பொடி செய்து அதற்கு இணையாக சீனியைப் பொடி செய்து கலந்து கொள்ளவும். தினமும் காலை உணவுக்குப் பின்னர் அரைக்கரண்டி அளவுக்கு சாப்பிட்டு வந்தால் உடல் சூட்டினால் ஏற்படும் நோய்களைத் தடுக்கலாம்.





# 98 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஒருகாலை முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

குசுமாவை முல் லிக்குக் கூட்டிப் போய் விட்டார்கள். அதனால் மாதுசிங்குடன் சென்று குசுமாவை மீட்டு வருவதை ஒத்திப் போட்டிருந்தான் மல்லா.

மாது சிங் அதற்குள் அவசரப்பட்டுச் சென்றி ருக்கிறான் என்றால் குசுமாவிடம் இருந்த ஏதோ அவசரமான செய்தி கிடைத்திருக்க வேண்டும் என்று நினைத்தான் மல்லா.

ஒத்திப்போடாமல் அப்போதே மாதுசிங் கைக் கூட்டிப்போய் குசுமாவை மீட்டு வந்திருக்கலாமே என்று நினைக்க நினைக்க தன்மீது எரிச்சலாக இருந்தது மல்லாவுக்கு. மாது சிங் இழப்பை அவனால் தாங்க முடியவில்லை.

மாதுசிங், பரத்சிங் இருவரும் இல்லாத நிலை யில் ஸ்ரீராமிடம் செல்வதும் ஆபத்து என்று மல்லா நினைத்தான். அதனால்தான் பாபாவிடம் செல்ல முடிவு செய்தான்.

பாபாவிடம் வெறுங்கை யுடன் சென்றால் கௌரவம் இருக்காது. பெரிய கொள்ளை ஒன்றை நடத்திவிட்டு செல்லலாம் என்று மல்லா நினைத்தது பூலானுக்கும் சரியென்றுதான் தோன்றியது.


மல்லா யார் முன்பாகவும் தலை குனிந்து நிற்கக் கூடாது என்பதே பூலானின் எண்ணம்.

வேரான்லையும் அழைத்துக் கொண்டு பூலானும் மல்லாவும் கான்பூரில் இருந்து புறப்பட்டனர். மல்லாவின் சகோதரர் ராம்லால் தயக்கத்தோடு விடைகொடுத்தார். அவர் கண்கள் கலங்கின.

"பூலான், நீதானம்மா இந்த முரட்டுப்பயலைப் பாதுகாப்பாக வைத்தி ருக்க வேண்டும். நீ புத்திசாலிப் பெண். நல்லாயிருங்கள்" என்றார் நா தழுதழுக்க ராம்லால்.

"கவலைப்படாதே அண்ணா. பூலான் காளி யின் அருள் பெற்றவள். புத்திசாலியின் அவதாரம். எனக்கோ, எங்களுக்கோ ஒரு ஆபத்தும் வராது" என்றான் மல்லா; காத்திருக் கும் ஆபத்தை அறியாமல்.

கான்பூரில் இருந்து புறப்பட்டு ஓரை என்னும் ஊரை அடைந்தனர். அங்கு மல்லாவைக் கண்டதும் ஊரே திரண்டு வந்து உபசரித்தது. பூலானை ஊர்ப்பெண்கள் சுற்றிநின்று பிரமிப்போடு பார்த்தார்கள்.



சிலர் தொட்டுப் பார்க்க பூலானுக்கு வெட்கமாகவும், சிரிப்பாகவும் இருந்தது.

"பூலான்தேவி வந்திருக்கிறாளாம்" என்று செய்தி பரவியதுதான் தாமதம், ஊரில் மிச்சம் மீதியில்லாமல் எல்லோரும் திரண்டு வந்துவிட்டனர்.

மல்லாவைவிட பூலானுக்கே மதிப்பு அதிகமாகிவிட்டது. அதனை மல்லாவும் கவனிக்கவே செய்தான். அதற்காக அவன் பொறாமைப்படவில்லை. பெருமைப்பட்டான்.

அந்த ஊருக்குள் பிரவேசிக்க முன்னரே பூலானை சீருடை அணியச் செய்துவிட்டான் மல்லா.

நீண்ட நேரம் அங்கே தாமதிப்பது ஆபத்து. பொலிசாருக்கு யாராவது தகவல் கொடுக்கக் கூடும் என்பதால் புறப்பட ஆயத்தமானார்கள்.

தங்கள் மத்தியில் பூலான் நாலு வார்த்தையாவது பேச வேண்டும். அவள் பேசுவதைக் கேட்க ஊரே விரும்புகிறது என்று சொல்லி வற்புறுத்தினார்கள்.

"ம்..பேசேன், ரொம்பத்தான் விரும்பிக் கேட்கிறார்கள்." என்றான் மல்லா.

பூலானுக்கு அப்படி யொரு பெரும் கூட்டத்தின் முன் பேசுவதற்கே நா எழ மறுத்தது. தொண்டை அடைத்துக்கொண்டது.

"வேண்டாம் பிறிதொரு நாள் வந்து பேசுகிறேன்; என்றாள்.

"எங்களுக்காக இப் போதே பேச வேண்டும்" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் எழுந்தன.

"பைத்தியமாகப் பேசு!" என்று ஒத்தூதி னான் மல்லா. அவனுக்குப் பூலான் எப்படிப் பேசுகிறாள் என்று பார்க்க ஆசையாக இருந்தது.

ஒரு விதமாக தைரியத்தை வரவழைத்துக் கொண்ட பூலான், தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டாள்.

"எங்களைக் கொடுமை செய்யும் நாய்களைக் கண்டு நாங்கள் ஓடக் கூடாது. ஒருநேரம் என்றால் அந்த நாய்கள் துரத்தோ துரத்தென்று துரத்தத்தான் செய்யும். அதற்கு தர்க்கை அம்மன் அருளும், துணிச்சலும் வேண்டும். என்னை நீங்கள் துணிச்சல்காரி என்று நினைக்கிறீர்கள் என்றால் அதற்கு முழுக்காரணமும் இவர்தான்!" என்று மல்லாவைச் சுட்டிக் காட்டினாள்.

"இவர் இல்லாமல் நான் இல்லை. கொள்ளைக் காரர்கள் என்று எங்களை தூற்றுகிறார்கள். எங்களைக் கொள்ளைக்காரர்களாக ஆக்கியச் செய்தது யார்? கொள்ளைக்காரர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். பொலிஸ்காரர்களைவிட, கிராம அதிகாரிகளைவிட, ஏழைகளைப் பிழிந்தெடுக் கும் இந்த கெட்ட கூட்டங்களைவிட கொள் ளைக்காரர்கள் நல்லவர்கள் தெரியுமா? நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம். நீங்கள் எங்களை நம்பலாம். ஆனால் எங்களைக் காட்டிக் கொடுப்பவர்களைச் சும்மா விடமாட்டோம்." பூலானின் பேச்சு சூடேறியது. முதலில் இருந்த தயக்கம் காணாமல் போயிருந்தது.

அத்தனைபேரும் திறந்தவாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஊசி விழுந்தால் கூட கேட்கக் கூடிய அமைதி அங்கு நிலவி யது. பூலானின் குரல் மட்டும் அந்த அமைதியை கிழித்து காளியின் குரலாக எழுவதுபோன்ற பிரமையில் இருந்தனர் ஊரவர்கள்.

பூலான் பேசி முடிந்ததும், மல்லா தன் கை கைகளை உயர்த்திய "பூலான்தேவிக்கு ஜே" என்று கத்தினான். மல்லாவைத் தொடர்ந்து கூட்டத்தினரும் அவ்வாறே குரல் எழுப்பினர்.

பூலானுக்குத் தான் சற்று அதிகமாக உணர்ச்சி வசப்பட்டு பேசிவிட்டோ என்பது போல் இருந்தது.

(திருப்பங்கள் தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காதல் தீவு

# கதாநாயகனாக கங்குலி

கிரிக்கெட் விளையாட்டை மையமாக வைத்து உருவாகும் 'கோல்கொண்டா ஹை ஸ்கூல்' என்ற படம் வங்காள மொழியில் மீள்தயாரிப்பாக வெளிவரவுள்ளது. இந்தப் படத்தை கிரிக்கெட் வீரர் கங்குலி தயாரித்து நடிப்பதாக சினிமா வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த 'கோல்கொண்டா ஹை ஸ்கூல்' படத்தை ராம் மோகன் பருவு தயாரிக்கின்றார். இந்தப் படம் பற்றி அவர் கூறுகையில், கொல்கத்தாவில் இருந்து ஒரு படத் தயாரிப்பு நிறுவனத்தினர் என்னை அணுகி படம் பற்றி பேசினார்கள். அப்போது கோல்கொண்டா படத்தை வங்க மொழியில் ரீமேக் செய்ய விரும்புவதாகவும் அதற்கான உரிமை வேண்டும் என்றும் கேட்டனர்.

அவர்களிடம் இதை தயாரிக்கப்போவது யார், நடிக்கப்போவது யார் என்று கேட்டேன். அப்போது அவர்கள் கிரிக்கெட் பின்னணியிலான கதை என்பதால் கிரிக்கெட் வீரர் சௌவ்ரவ் கங்குலி தயாரித்து கிரிக்கெட் கோச்சாக நடிக்க உள்ளார் என்றனர். இதையடுத்து வங்க மொழி உரிமையை நான் வாங்கியுள்ளேன். மற்ற எந்த மொழியிலும் ரீமேக் செய்ய உரிமை தரவில்லை. அத்துடன் இப்படத்தை ஆங்கிலத்தில் டப்பிங் செய்ய முடிவு செய்துள்ளோம் என்றார்.

ஸ்ரேயா என் படத்தை தடைசெய்ய முயன்றால், அவர் மீது வழக்கு தொடருவேன் என்று மலேசியா பாண்டியன் கூறியிருக்கிறார்

மலையாளத்தில் மம்முட்டி, ப்ருத்விராஜ், ஸ்ரேயா உள்ளிட்டோர் நடிப்பில் வெளிவந்த படம் போக்கிரி ராஜா.

இப்படத்தில் நடிக்கும் போதே மலையாளத்தை தவிர வேறு எந்த மொழியிலும் இப்படத்தை வெளியிடக் கூடாது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்த படத்தில் தான் நடிக்க ஒப்புக்கொண்டதாகவும், அதை மீறி மலையாள பட அதிபர் தோமஸ் அண்டனி, இப்படத்தை தமிழில் வெளியிடவுள்ளார்.

இப்படத்தை தமிழில் வெளியிடக் கூடாது என்று தென்னிந்திய நடிகர் சங்கத்தில் ஸ்ரேயா புகார் கூறியிருந்தார். இதை அறிந்த இப்படத்தை தம-

## ஸ்ரே

ழில், ராஜா பே
இருக்கும் பட
அண்டனியிடமி
றயாக பதிவு
அவர் ஸ்ரேயா
நஷ்டத்தை ஏற்
படத்தை தடை
எனக்கு ஏற்படு
அவர்களே பொ
ஆவார்கள். அ
முயற்சிப்பவர்க
நீதிமன்றத்தில்
ஈடு வழக்குத்
தொடருவேன்
என்று கூறியிரு
கிறார்.

# ரேவதிக்கு தேசிய விருது

தமிழ் நடிகையாக இருந்து தற்போது இயக்குநர் அவதாரம் எடுத்துள்ள ரேவதியின் குறும்படம் 59-வது தேசிய விருதுக்கு தேர்வாகியுள்ளது "ரெட் பில்டிங் வேர் தி சன்செட்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த குறும்படம், திரைப்படம் அல்லாத பிரிவின் கீழ் சிறந்த படத்திற்கான விருதிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இது பற்றி ரேவதி கூறுகையில், இது ஒரு 17 நிமிடங்கள் ஓடும் குறும்படம், பெற்றோர் அவர்களது குழந்தைகளை எவ்வாறு வளர்க்கிறார்கள் என்பதை மையமாகக் கொண்ட இப்படம் தேசிய விருதினை வென்றுள்ளது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. நாங்கள் இப்படத்தை தயாரிக்கும் போது பெற்றோர் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற லட்சியத்துடன் தான் உருவாக்கினோம். எந்த விருதினை யும் நாங்கள் எதிர்பார்க்க வில்லை. இது எதிர்பாராத மகிழ்ச்சி என்றார்.



# இந்தியில் 'கொலவெறி' நாயகன்

'3' படத்தில் 'கொலவெறி' பாடல் மூலம் பிரபலம் ஆனதால் முதன்முறையாக இந்தி படத்தில் நடிக்கிறார் தனுஷ். இயக்குனர் ஆனந்த் எல்.ராய் இயக்கும் 'ராஞ்ஜா' என்ற புதிய படத்தில் நடிக்கின்றார். இவருக்கு ஜோடியாக சோனம் கபூர் நடிக்க உள்ளார். காசியை பின்னணியாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக்கதையில் தனுஷுக்கு ஜோடியாக நடிக்கும் நடிகை தேர்வு நடந்து வந்தது. தற்போது சோனம்கபூர் நடிக்க முடிவாகி உள்ளது. ஏற்கனவே 2 இந்தி படங்களில் சோனம்கபூர் நடித்து வருகிறார். இதனால் தனுஷ் படத்துக்கு கால்ஷீட் தருவதில் பிரச்சினை எழுமா என்ற பேச்சும் இருக்கிறது. ஆனால் இந்த வாய்ப்பை நழுவவிட சோனம் கபூருக்கு விருப்பம் இல்லாததால் மற்ற தயாரிப்பாளர்களுடன் பேசி இப்படத்துக்கு கால்ஷீட் ஒதுக்குவார் என்று கூறப்படுகிறது.

ர
செ

## அ

இய
அ
பெயர்
இத
மன்றங்கள்
மங்காத்தா
கர் மன்றங்
உதவி தே
உள்ளாராம்
அஜீத் திட்
இதற்கா
அதன் செய
2 படத்தில்
அறிவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரட்டைவேடத்தில் ஆர்யா, அனுஷ்கா

முதன்முதலாக ஆர்யா இருவேடங்களில் இரண்டாம் உலகம் என்ற படத்தில் நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளன. இந்தப் படத்தை செல்வராகவன் இயக்க ஆர்யாவுக்கு ஜோடியாக அனுஷ்கா நடிக்கின்றார்.

இப்படத்தில் அனுஷ்காவும் ஆர்யாவும் இரட்டை வேடத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இப்படத்தின் படப்பிடிப்புகள் பெரும்பகுதி முடிவடைந்துள்ள நிலையில் இதன் இறுதிக்கட்ட படப்பிடிப்புகள் கோவாவில் நடைபெறுகிறது. இந்தப் படம் பற்றி ஆர்யா தெரிவிக்கையில், சினிமாவில் வெற்றிபெற வேண்டுமென்றால் எலி மாதிரி வேகமாக ஓடுவது முக்கியமல்ல, ரொம்ப தூரம் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வெற்றி பெற முடியும்.

நான் அதே மாதிரி ஓடுவதற்கு தயாராகிவிட்டேன். இப்படத்தில் என்னுடைய கதாபாத்திரம் என்னுடைய வாழ்வில் மறக்க முடியாததாக இருக்கும் என்று கூறியுள்ளார்.


'க்ளிக் 3'

## சினேகாவுக்கு மே 11இல் டும் டும்

நடிகை சினேகாவுக்கும், நடிகர் பிரசன்னாவுக்கும் சென்னையில், வருகின்ற மே மாதம் 11ஆம் திகதி திருமணம் நடைபெற உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

சென்னை வானகரம் அருகில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி மண்டபத்தில், திருமணம் நடக்க உள்ளது. திருமணத்துக்கான வேலைகள் இப்போதே தொடங்கிவிட்டன. "திருமணத்துக்குப்பின், சினேகா விரும்பினால் நடிக்கலாம். விரும்பவில்லை என்றால் நடிப்பதை நிறுத்திக் கொள்ளலாம். அதில், நான் தலையிடமாட்டேன். வாழ்க்கை வேறு, தொழில் வேறு என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்" என்றார் பிரசன்னா.

## ஸ்ரேயா மீது வழக்கு?

, ராஜா போக்கிரி ராஜா என்ற பெயரில் வெளியிட
க்கும் பட அதிபர் மலேசியா பாண்டியன், நான் தோமஸ்
டனியிடமிருந்து இப்படத்தை தமிழில் வெளியிட முறை-
க பதிவு செய்திருக்கிறேன். இந்த திரைப்படத்தை
ர் ஸ்ரேயா தடைசெய்ய முயற்சிப்பது எனக்கு பெருத்த
டத்தை ஏற்படுத்தும். இதனை மீறி ஸ்ரேயா என்
தை தடை செய்ய முயன்றால்,
க்கு ஏற்படும் நஷ்டங்களுக்கு
ர்களே பொறுப்பு
ார்கள். அப்படி
ற்சிப்பவர்கள் மீது
ன்றத்தில் நஷ்ட
வழக்குத்
டருவேன்
ு கூறியிருக்
ர்.

## ...ருது

17
...களது
...பதை
...னை
...ங்கள்






## விஜய்க்கு பதிலாக அஜ்மல்

நடிகர் விஜய்க்காக உருவாக்கிய கதையில் தற்பொழுது அஜ்மல் நடித்துக் கொண்டிருக்கிறார். இயக்குனர் ருத்ரன், வெற்றி செல்வன் என்ற பெயரில் ஒரு புதிய படத்தை உருவாக்கி வருகிறார். இப்படத்தில் நடிகர் அஜ்மலும், அவருக்கு ஜோடியாக ராதிகா ஆப்டேவும் நடிக்கிறார்கள்.

இப்படத்தின் கதையை முதலில் விஜய்க்காக தான் உருவாக்கினாராம் ருத்ரன். கதையையும் விஜய்யிடம் கூற அவரும் நடிப்பதாக சொல்லியிருந்தார். இந்நிலையில் சில பல காரணங்களால் விஜய் நடிக்க முடியாமல் போக, அவருக்கு பதிலாக அஜ்மலை நடிக்க வைத்திருக்கிறார். இப்படத்தின் படபிடிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. மதன் கார்கி பாடல் வரிகள் எழுத, மணிசர்மா இசையமைத்து வருகிறார். முன்னதாக இப்படத்திற்கு 3ஆவது முறையாக தலைப்பை மாற்றியிருக்கிறார் இயக்குநர். ஏற்கனவே ரணம் என்று வைத்து, பின்னர் சத்யவான் என்று மாற்றி, இப்போது வெற்றி செல்வன் என்று வைத்திருக்கிறார்.

## அஜீத்தின் புதிய இயக்கம்

ரசிகர் மன்றங்களை கலைத்து விட்ட அஜீத் விரைவில் புதிய இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார். ரசிகர்களால் தல என்று செல்லமாக அழைக்கப்படுகிறார் அஜீத். இவர் கடந்த பிறந்ததினத்தின் போது தன் பெயரில் இயங்கி வந்த ரசிகர் மன்றங்களை அதிரடியாக கலைத்தார்.

இதனால் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஆனாலும் தொடர்ந்து மன்றங்களை நடத்தி வந்தனர். மன்றங்களை கலைத்த பிறகு வெளியான மங்காத்தா படம் வெற்றிகரமாக ஓடியது. அஜீத்திடம் உதவி கேட்டு அடிக்கடி ரசிகர் மன்றங்கள் சார்பில் பலர் கடிதம் அனுப்பி வருகின்றனர். உண்மையிலேயே உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவ வேண்டும் என்று அஜீத் எண்ணி உள்ளாராம். அதற்காக அரசியல் தொடர்பில்லாத ஒரு இயக்கத்தை தொடங்க அஜீத் திட்டமிட்டிருப பதாக தெரிகிறது.

இதற்கான அறிவிப்பை அவர் விரைவில் வெளியிடுவார் என்றும், அப்போது அதன் செயல்பாடுகள் பற்றியும் அறிவிப்பார் என்று கூறப்படுகிறது. பில்லா 2 படத்தில் அஜீத் பிஸியாக இருப்பதால் அதன் படப்பிடிப்பு முடிந்த பிறகு அறிவிப்பு வெளியாகும் என்று தெரிகிறது.

## காஜல் அகர்வால் ஆவேசம்!

நடிகர் நடிகைகள் உள்ளிட்ட பிரபலங்கள் இன்டர்நெட்டில் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூகவலைத்தளங்களை பயன்படுத்துகின்றனர். தங்களை பற்றிய விவரங்கள், போட்டோக்கள் போன்றவற்றை அவற்றில் போட்டு வைத்து ரசிகர்கள் மற்றும் நலம் விரும்பிகளுடன் தொடர்பு வைத்து கருத்து பரிமாறிக் கொள்கிறார்கள். இதனை சில சமூகவிரோத கும்பல் மோசடியாகவும் பயன்படுத்துகின்றனர்.

நடிகர், நடிகைகள் பெயரில் போலி எக்கவுண்ட் துவங்கி ரசிகர்களுடன் அவர்கள் பேசுவது போல் தொடர்பு வைத்துள்ளார்கள். பல நடிகைகள் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளனர். தற்போது காஜல் அகர்வால் பெயரிலும் டுவிட்டரில் மோசடி நடக்கிறது. காஜல்அகர்வால் படங்களை அதில் போட்டு வைத்து ரசிகர்களுடன் காஜல்அகர்வால் பேசுவது போல் மோசடி கும்பல் பேசி வருகின்றனர். ஆபாச கேள்விகளுக்கு பதில் சொல்வது போன்றும் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் அதை உண்மை என்று நம்பி தொடர்பு வைத்துள்ளனர்.

பிரபல இந்தி நடிகர் நில்நிதின் முகேஷும் இது போல் தொடர்பு கொண்டு ஏமாந்துள்ளார். இது குறித்து காஜல் அகர்வால் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதும் ஆவே சம் அடைந்தார்.

அவர் கூறிய தாவது, டுவிட்டர், பேஸ்புக் போன்ற சமூகவலைத்தளங்களில் நான் இல்லை. ஆனால் எனது பெயரை போலியாக பயன்படுத்தி மோசடி நடிக்கிறது. மோசடி நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன். அவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முயற்சித்து வருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடன் உடல் கடலில் வீசப்பட்டதா? துலங்கும் மர்மம்?



"கொல்லப்பட்ட பின்லேடனின் உடல் கடலில் விடப்பட்டதாக கூறப்படுவது பொய்' என்ற சந்தேகத்தை கிளப்பும் ஈமெயில் ஒன்று விக்கிலீக்ஸால் வெளியிடப்பட்டு, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பெப்ரவரி 26 ஆம் திகதி விக்கிலீக்ஸ் வெளியிடத் துவங்கியுள்ள லீக் செய்யப்பட்ட ஈமெயில் தொகுதியில், இந்த ஈமெயிலும் உள்ளது.

அமெரிக்க ஆதரவுடன் இயங்குவதாக கூறப்படும் Stratfor தனியார் உளவு ஆய்வு நிறுவனத்தின் கம்ப்யூட்டர்களில் இருந்தே இந்த ஈமெயில்கள் லீக் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிறுவனத்தில் இருந்து அனுப்பப்பட்ட ஈமெயில் ஒன்றில், பின்லேடனின் உடல் கடலில் போடப்பட்டது பொய் என்ற சந்தேகம் கிளப்பப்பட்டு, நிஜத்தில் அவரது உடல் அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் எந்த இடத்துக்கு பின்லேடன் உடல் கொண்டு செல்லப்பட்டது எனவும் அதே ஈமெயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே. 1ஆம் திகதி அமெரிக்க கடற்படையின் SEAL Team Six நடத்திய அதிரடி ரெயிட் மூலம் பாகிஸ்தானில் கொல்லப்பட்ட பின்லேடனின் உடலை, ரெயிடு நடத்திய அதிரடிப் படையினர் தம்முடன் ஹெலிகொப்டரில் எடுத்துச் சென்றிருந்தார்கள். அந்த உடல் நேரடியாக USS Carl Vinson அமெரிக்க போர்க் கப்பலுக்கு எடுத்து செல்லப்பட்டது என அமெரிக்கா தெரிவித்திருந்தது.

பின்லேடன் உடலுக்கு அமெரிக்க போர்க்கப்பலில் வைத்து இஸ்லாமிய முறையில் இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டு, உடல் கடலில் போடப்பட்டுவிட்டது என்பதுடன் அமெரிக்கா, அந்த விவகாரத்தை முடித்திருந்தது. ஆனால், எமது "பின்லேடன் வீட்டில் கிடைத்த இரகசியங்கள், லீக் ஈமெயிலில்! கட்டுரையில் குறிப்பிடப்பட்ட நிழல் உளவுப் பிரிவின் துணைத் தலைவர் பிரெட் பர்டனினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஈமெயில் ஒன்றே தற்போது வெளியாகி, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

## ஈமெயில் என்ன சொல்கிறது?

பின்லேடன் உடல் கடலில் போடப்படுவதற்காக USS Carl Vinson கப்பலுக்கு எடுத்துச் செல்லப்படவில்லை. சி.ஐ.ஏ.-யின் தனி விமானம் ஒன்றில் அமெரிக்காவின் டெலவெயர் மாநிலத்திலுள்ள டோவர் நகருக்கு முதலில் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கிருந்து, பெத்தெஸ்டா நகரில் உள்ள அமெரிக்க இராணுவத்தின் Armed Forces Institute of Pathology கட்டடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது என்கிறது.

ஈமெயிலில் குறிப்பிடும் பெத்தெஸ்டா நகரம் என்பது, மேரிலேண்ட் மாநிலத்திலுள்ள மிகச் சிறிய நகரம். மொத்த சனத்தொகையே 60,000 மக்கள்தான்.


ஆனால், அதிகம் படித்தவர்கள் வசிக்கும் பகுதி என்று அழைக்கப்படும் இடம். போர்ப்ஸ் தர வரிசைப்படி, 'America's most educated small towns' லிஸ்டில் முதலிடம் இந்த சிறு நகரத்துக்குதான்.

சிறிய நகரம், மற்றும் படித்தவர்கள் அதிகம் வசிக்கும் நகரம் என்பதாலோ என்னவோ, அமெரிக்க இராணுவம், மற்றும் உளவுப் பிரிவுகளின் முக்கிய இலாகாக்கள் சில இங்கு இயங்குகின்றன. உதாரணமாக, Naval Surface Warfare Center (Carderock Division) அமைந்திருப்பது இங்குதான்.

பின்லேடனின் உடல், இங்குள்ள Armed Forces Institute of Pathology கட்டடத்துக்கு இறுதியாக கொண்டு செல்லப்பட்டது என்று கூறப்படுவதால், இந்த கட்டடத்தின் கம்பவுண்டிக்குள் அவரது உடல் எரிக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

பின்லேடன் கொல்லப்பட்டு சரியாக நான்கரை மாதங்களில், கடந்த வருடம் செப்டெம்பர் 15ஆம் திகதி, பெத்தெஸ்டா நகரில் அமைந்திருந்த Armed Forces Institute of Pathology முழுமையாக மூடப்பட்டுவிட்டது. அங்கு பணிபுரிந்த அனைவரும், பாதுகாப்பு அமைச்சின் வெவ்வேறு இலாகாக்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டுவிட்டனர்.

ஒருவேளை பின்லேடன் உடல் மே மாதத்தில் அங்குதான் இறுதியாக கொண்டு வரப்பட்டிருந்தால், அப்போது அங்கிருந்து இயங்கிய Armed Forces Institute of Pathology இப்போது அங்கில்லை. அதில் பணிபுரிந்த யாருமே இப்போது அந்த கட்டடத்தில் இல்லை. புரிகிறதா?



# கண்ணதாசனின் அவள் ஒரு இந்துப் பெண்



06

அவர்கள் குடிவெறியில் பேசும்பேச்சே பின்னாளில் ஒரு பாஷையாயிற்று. இன்றைக்கும் கேவலமான பேச்சு 'செங்காங் கடைப் பேச்சு' என்றுதான் வர்ணிக்கப்படுகிறது.

பெரம்பூரில் அத்தகைய செங்காங்கடை ஒன்றுக்குச் சிறிது தூரத்தில்தான், வைரமுத்துவின் வீடு இருந்தது. வைரமுத்து வீடு வந்து சேர்ந்தபோது, வீட்டின் உட்புறம் தாளிடப்பட்டிருந்தது.

கதவை ஓங்கித் தட்டினான் வைரமுத்து. சத்தமில்லை. "கல்யாணி, கல்யாணி" என்று சத்தமிட்டு மீண்டும் தட்டினான். பதில் இல்லை.

அப்போது கல்யாணியின் மகன், அடுத்த தெருவில் இருந்து அழுதுகொண்டு, "மாமா, மாமா" என்று ஓடி வந்தான்.

"என்ன, என்ன" என்று பதறிப்போய்க் கேட்டான் வைரமுத்து.

"உள்ளே சிட்டிபாபு குடிச்சிட்டு வந்து; அம்மாவைக் கட்டிப் பிடிச்சு, சண்டை போட்டு என்னமோ பண்றான். என்னைப் புடிச்சி வெளியே தள்ளிட்டான்" என்றான் அந்தப் பையன்.

வைரமுத்து கதவை ஓங்கி உதைத்தான். தாழ்ப்பாளோடு கதவு தனியாகப் போய் விழுந்தது. உள்ளே கற்பழித்து முடிந்த நிலையில் எழுந்துநின்றான் சிட்டி பாபு.

கன்னங்கள், மார்பு, கால்களில் இரத்தம் வடிய இறந்து கிடந்தாள் கல்யாணி. வெறி பிடித்தது வைரமுத்துவுக்கு.

அங்கே இருந்த "ஸ்டாரங்கு ஹாண்டிலை" எடுத்து ஆத்திரத்தோடு சிட்டிபாபுவின் தலையை குறிவைத்து அடித்தான் ஒரு அடி.

ஒரே அடி மண்டை உடைந்தது. சிட்டிபாபுவும் பிணமாக விழுந்தான் கல்யாணி மீது.

தங்கையைக் கட்டிப்பிடித்தபடி அழுதான் வைரமுத்து. வெளியில் இருந்து இதைக் கவனித்த ஒருவன் சத்தம் போட, கூட்டம் கூடிவிட்டது.

பன்னிரண்டு வயது நிரம்பிய கல்யாணியின் மகனை, அங்கு ஓடி வந்த தன் நண்பன் ஆரோக்கியசாமியிடம் ஒப்படைத்துவிட்டு, ஓடுவதற்குத் தயாரானான் வைரமுத்து.

அந்நாளில் செங்காங்கடைப் பகுதிகளில் பலவகையான ரவுடிகள் உண்டு. பொலிசாருக்கு அவர்களிடம் 'மாமூல்' உண்டு. அவர்களை 'ரவுடி' என்றுசொல்ல மாட்டார்கள். 'கில்லாடி' என்று சொல்வார்கள். அவர்களைக் கண்டு நகரமே பயப்படும்.

ஆனால் குப்பத்து வாசிகளோ குடிசைவாசிகளோ ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்துவிட மாட்டார்கள்.

"ஆரோக்கியசாமி, இவனை நீதான் காப்பாற்ற வேண்டும்! நான் உயிரோடு இருந்தால் வந்து சந்திக்கிறேன்" என்றான் வைரமுத்து.

"சரி! சரி! நீ போ, நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் ஆரோக்கியசாமி.

பையன் தங்கப்பன் அழுதுகொண்டே மாமனை வழியனுப்பினான். வைரமுத்து தப்பி ஓடுவதற்கு எல்லோரும் துணை புரிந்தார்கள். ஆயினும் செங்காங்கடைப் பக்கம் ரோந்துவரும் பொலிஸ் வைரமுத்துவைத் துரத்த ஆரம்பித்தது.

பையன் தங்கப்பன் அழுதுகொண்டே மாமனை வழியனுப்பினான். வைரமுத்து தப்பி ஓடுவதற்கு எல்லோரும் துணை புரிந்தார்கள். ஆயினும் செங்காங்கடைப் பக்கம் ரோந்துவரும் பொலிஸ், வைரமுத்துவைத் துரத்த ஆரம்பித்தது.

சந்து, பொந்துகளுக்குள் எல்லாம் புகுந்து ஓடினான் வைரமுத்து. பின்னாலேயே பொலிசும் துரத்திற்று. அவன் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஓடி வந்தபோது, அங்கே பாதாள சாக்கடையில் மூடி ஒன்று திறந்திருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்த வைரமுத்து, பாதாளச் சாக்கடைக்குள் இறங்கினான். மேலே பொலிசார் ஓடுகின்ற சத்தம் அவன் காதுகளுக்குக் கேட்டது.

நல்லவேளையாக, 'பாதாளச் சாக்கடைக்குள் அவன் இறங்கியிருப்பான்' என்று அவர்கள் கருதவில்லை.

உட்புறமாகவே நடந்து வந்தான் வைரமுத்து. முழங்கால் அளவுச் சாக்கடை ஓடிக்கொண்டிருந்தது.

சிறிது தூரம் நடந்து வந்ததும், ஒரு திருப்பத்தில் அவன் திகைத்து நின்றான். அங்கே அவன் கண்ட காட்சி தன் நிலையை மறக்கவைத்தது.

தன்னைப் போலவே இருந்த எந்த நபரை அவன் கன்னிமாரா ஓட்டலில் இறக்கிவிட்டானோ, அதே நபர் குற்றுயிரும் குலை உயிருமாக, அங்கே சாய்ந்து கிடந்தார்.

பக்கத்தில் போய், "ஐயோ, ஐயோ" என்றான் வைரமுத்து.

கழுத்து நெரிக்கப்பட்ட நிலையிலும் அவர் கண்ணைத் திறந்து பார்த்தார். அவரது அடிவயிற்றில் இரண்டு கத்திக் குத்துக் காயங்கள் இருந்தன.

"தம்பி, நீயா" காயங்கள் வழியாக சாக்கடை நீர் புகுந்திருப்பதையும் காப்பாற்றவே முடியாத அளவுக்குக் காயங்கள் இருப்பதையும் கண்டு கொண்ட வைரமுத்து, "ஐயா! என்ன நடந்தது? யார் செய்தது?" என்று கேட்டான்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக நிலைமை!

**மட்டக்களப்பு** மாவட்டத்தில் உள்ள சமூகங்கள் அவற்றின் சமூக பொருளாதார மற்றும் கலாச்சார பின்னணிகள் குறித்த வேறுபாடுகளினூடே கடந்த இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக இடம்பெற்று வந்த ஆயுத முரண்பாடுகளின் பல்வேறுபட்ட தாக்கங்களை அனுபவித்துவருகின்றனர். இதற்கும் மேலதிகமாக 2004 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி கடற்பேரலைகள் இப்பிரதேசத்தின் பெரும்பாலான இடங்களை அழித்து ஏற்கனவே இருந்த நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டிருந்தது.

இதன் காரணமாக சமூகங்களின் பாரம்பரிய சமூக பொருளாதார கட்டமைப்புகள் பல வழிகளிலும் தகர்ந்து போய் விட்டிருந்தது. அதாவது மக்களின் இடப்பெயர்வு குடும்ப ஒருங்கிணைப்பு அற்றுப்போதல் பாரம்பரிய வாழ்வாதாரம் சிதைந்து போதல் மனித விழுமியங்களிலும் நடத்தைக் கோலங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றைக் கூறலாம்.

இத்தகைய மாற்றங்கள் குடும்பக் கட்டமைப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. அவற்றில் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் என்னும் அம்சம் ஒரு முக்கியமான வெளிப்பாடாக இச்சமூகங்களில் தோற்றம் பெற்றுவருகின்றது.

பொதுவாக பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் என்பவை விதிவிலக்கான ஒன்றாகவே காணப்பட்டது. ஆனால் தற்போதைய நிலைமைகள் மேலும் மேலும் பெண்களை குடும்பங்களில் தலைமைப் பங்கை வகிக்க வேண்டியவர்களாக ஆக்கியுள்ளது. இந்நிலைப்பாடு பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் பற்றிய ஒரு புதிய வரைவிலக்கணத்தை வேண்டி நிற்கின்றது. எனவே தற்போதைய நிலைமைகளின் படி விதவைகள் என்ற பின்னணியைத் தவிர சமூக மற்றும் அரசியல் காரணிகளுக்காகவும் பெண்கள் குடும்பங்களில் தலைமை பங்கை வகிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு வருகின்றது. எனவே ஒரு பெண் குடும்பங்களில் தலைமைதாங்க வேண்டி வருவதற்கான காரணம் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றது. பெரும்பாலும் இந்தப் பெண்கள் எல்லோரும் குடும்பங்களை நிர்வகிப்பவர்களாக தலைமை தாங்குபவர்களாக பார்க்கப்பட்ட போதும் அவர்கள் முகம் கொடுக்கின்ற சவால்களும் விவகாரங்களும் வகைக்கு வகை மாறுபட்டு நிற்கின்றது.

இந்த வகையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தம் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் சமூக நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்திக் கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்களை முகம் கொள்ளும்போது ஏற்பட்ட அனுபவங்களை வெளிப்படுத்துதல் மற்றும் வீட்டுக்குள்ளும் சமூகத்திலும் தமது தேவைகளை பெற்றுக் கொள்வதில் செல்வாக்கு செலுத்தும் காரணி களைக் கண்டறிதல் முக்கியமான ஒரு விடயமாகும்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப்பகுதியை கரை பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் நிலைமை தற்போது அவலக்குரல்களாக உள்ளன. இங்கு வாழ்கின்ற மக்கள் பொதுவாக பல தடவைகள் ஆயுத வன்முறைகளினால் இடம் பெயர்ந்து தங்களது உறவுகள் சொத்துக்கள் ஜீவனோபாயம் போன்றவற்றை விட்டு வெளியேறி அகதிகளாக இடம்பெயர்ந்து நிலையில் மீண்டும் இந்த மக்களை அரசாங்கம் மீளக்குடியேற்றிவிட்டிருந்தது. அன்று தொடக்கம் இன்றுவரை குறிப்பாக சில கிராமங்களில் அடிப்படை வசதிகள் வழங்கப்படாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இயற்கை செயற்கை இடர்களினால் குடும்ப பெண்கள் தங்களது கணவன்மார்களை இழந்தும், பிள்ளைகளை இழந்தும் கைவிடப்பட்ட பெண்கள் அல்லது விவகாரத்துப் பெற்றோராகவும் வயது குன்றிய கணவனைக் கொண்ட பெண்களாகவும் மூத்த ஆண் அங்கத்தவர் காணாமல் போய் விட்ட பெண்களாகவும் குடும்பத்தின் வறுமை நிலைமை கருதி திருமணம் ஆகாத பெண்களாகவும் காணப்படுகின்றனர். இதனைவிட இளம் பெண்களின் கணவன்மார் கள் மனைவிக்கு முன் கொலை செய்த நிலைமைகளும் கடத்திச் சென்ற நிலைமைகளும் கண் முன்னே பிள்ளைகளை அச்சுறுத்தி கொடுமை புரிந்த நிலைமைகளினால் நேரடியாக பாதிக்கப்பட்ட இளம் பெண்களின் நிலைமைகளும் இன்று எமது கிராம பிரதேசங்களில் மறைக்க முடியாத வடுக்களாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளில் இருந்து மீள முடியாத குடும்பங்களின் இன்றைய நிலைமைகளும் கேள்விக்குறிகளாகவே இருக்கின்றது.

வாகரை வாணி

இதனால் இளம் பெண்கள் விரக்தியடைந்த நிலையிலும், தனிமைப்படுத்தல் குடும்பத்துடன் ஐக்கியமின்மை தங்களது பிள்ளைகள் மீது கவனமின்மை இதனால் பிள்ளைகளின் எதிர்கால கல்வியில், வளர்ச்சி, தொழில் விருத்தி, பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்களால் பாதிக்கப்படுகின்றனர். இதனூடாக குடும்பம், கிராமம் பிரதேசம், நாடு என்ற வகையில் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக இளம் வயதுப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டதினால் அவர்கள் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுக் காணப்படுவதுடன் இதிலிருந்து மீளமுடியாமலும் சிரமப்படுகின்றனர்.

பல தடவைகள் முகாம்களில் மௌனிகளாக வாழ்ந்த சில பெண்கள் இன்றும் தமது இல்லங்களிலும் மௌனிகளாகவே வாழ்ந்து அவல நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.. கடந்த கால இடர்களினால் மக்களுக்கு கிடைத்த விளைவு பெரும் மனித அவலமே என்பதை இன்று நாம் அனைவரும் சிந்திக்கப் பார்க்க வேண்டியுள்ளது. மக்களின் கண்ணீரை துடைக்கவும் அவர்களின் அவலத்தைக் குறைக்கவும் நீளாத எவரது கரங்களையும் மக்கள் ஒரு போதும் மறப்பதற்கு போவதில்லை. இளம் வயது விதவைகளான குடும்பத் தைத் தலைமை தாங்கும் பெண்களின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு அவர்களை வளர்ச்சியை நோக்கித் திசை திருப்புவதற்கும் இப் பெண்களின் மனதில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல் அவசியமும் அவசரமுமாகும்.

# எமது கடல் மாறிவிடும் அச்சம்!

இருக்கரக்கம் கடலாக

ஏ.எச்.ஏ. ஹுசைன்

**நாங்கள்** கடந்த முப்பது வருடகால ஆயுத வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட இலங்கை நாட்டுப் பிரஜைகள். வாரத்தில் 3 நாட்கள் தொழில் செய்து எங்களை யார் ஐயா காப்பாற்றுவது ? மாலை நாலு மணிக்குப் பிறகு அந்த மீரி வரும் ஆயிரக்கணக்கான இந்திய அதிவேக இழுவைப் படகுகளை நீங்கள் காண வாருங்கள். நாங்கள் 40 வருடகாலமாக இதனைச் சொல்லிக் கொண்டு தானிருக்கின்றோம் அவர்கள் செய்து கொண்டுதானிருக்கின்றார்கள்.

கடலுக்குப் பெரிய அழிவு இது தான். எமது கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் இந்திய இழுவைப்படகுகளின் நாசத்தையும் அடாவடித் தொழில்முறையையும் நிறுத்தினால் போதும். கடல் வளமும் பெருகும் எங்களது வாழ்வும் சிறக்கும்.

பல ஆயிரம் மடங்கு கடல் வள அழிப்பு வேலைகளில் இந்திய மீனவர்கள் ஈடுபடும் போது நாங்களும் எங்களுக்கு அனுமதிக்கப்பட்டதை எப்படியாவது பிடிப்போம என்கிறார்கள் நமது நாட்டு மீனவர்கள். இந்திய இழுவைப் படகுகள் இரண்டிரண்டாகப் பயன்படுத்தி மடிவலைகளைப் பாவித்து கடல் மடியில் இருந்து வழித்து அள்ளிக் கொண்டு போகின்றார்கள். பெரிய மீன்களை எடுத்துக் கொண்டு சிறிய மீன் குஞ்சுகளை கேரளாவில் உள்ள கோழித்தீன் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி விடுகின்றார்கள். அங்கிருந்து அவை கோழித்தீன்களாக தயாரிக்கப்பட்டு கோழிப்பண்ணைகளுக்கு விற்கப்படுகின்றன. இரண்டு இழுவைப் படகுகளாகச் சேர்ந்து கடல் மடியை துளாவி சுமார் 20 ஆயிரம் கிலோ குஞ்சு மீன்களை மாத்திரம் சேர்த்துச் செல்கின்றார்கள். இது அவர்களது வலையில் அகப்படும் பெரிய ராட்சத மீன்களுக்குப் புறம்பாகவே பிடிபடும் மீன்குஞ்சுகள். ஆக ஒட்டு மொத்தத்தில் இந்தியர்களின் கோழிகள் கூட நமது கடல் வளத்தில் வாழுகின்ற பொழுது நாங்கள் இங்கே பட்டினிச் சாவை எதிர்நோக்குகின்றோம்.

நாங்கள் கடலில் அடிபட்டுத் தொலைந்தாலும் எங்களைக் கவனிப்பாரில்லை. நவீன தொழிநுட்பங்கள், அது சம்பந்தமான மீன் பிடி உபகரணங்கள், பயிற்சிகள் எதுவும் எங்களுக்கில்லை. நவீன கருவிகளும் இல்லை. ஆழ்கடல் மீன்பிடி நமக்கு ஒரு கனவாகத்தான் இருக்கின்றது. ஆகக் கூடியது நாங்கள் பிடிக்கும் பெரிய மீன்கள் 2 கிலோகிராம் அளவுடையதாகத்தானிருக்கும். மன்னார் மாவட்டத்திலேயே ஒரு மீன்பிடித் துறைமுகம் இல்லை. கடலில் ஆபத்துக்களை நேரும்போது தொலைத் தொடர்பு வசதிகளோ ஆபத்திலிருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஜக்கெட்களோ எந்த ஒழுங்குகளும் இல்லை. படகுகள் பழுதடைந்து விட்டால், காற்று மழை புயல் என்பவற்றில் திசை தடுமாறிவிட்டாலும் எங்களது உறவினர்கள் எங்களைத் தேடித் துழாவினால்தான் எங்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவரும். இப்படித்தான் எங்களது வாழ்க்கை. இன்றைக்கும் யாராலும் கண்டு கொள்ளப்படாத ஆபத்து நிறைந்த ஒன்றாக இருந்து வந்திருக்கின்றது. முப்பது வருடப் போரினால் எல்லாவற்றையும் இழந்து விட்ட நாங்கள் இன்றுவரை கடன்பட்ட மீனவர்களாகவே வாழ்கின்றோம்.

இந்திய இழுவைப் படகுக் காரர்களின் வருகையை தடுத்தால் பாதிக்கப்பட்ட நமது கரையோர சமுதாய மக்களின் வாழ்வு, நமது பிரதேசம், நமது நாடு எல்லாம் செல்வச் செழிப்பு மிக்கதாக மாறும்.

இந்திய மீனவர்கள் நமது மீனவர்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதால் வேறு வழியின்றி நமது மீனவர்களும் தமது ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்வதற்கான வேறு வழிகளை நாடுகின்றார்கள். அதில் ஒன்றுதான் கரையிலுள்ள மரங்களை வெட்டி கடலுக்குள் கொண்டு சென்று நட்டு அதில் கணவாய் மீன்கள் ஆயிரக்கணக்கில் மொய்க்கும்போது அவற்றை ஒரேயடியாக வலைவீசி வைத்துப் பிடிப்பது. இது ஆபத்தானதும் கடல் வளத்தை அழிக்கக்கூடியதும் தான்.

கடலில் சுமார் இரண்டு இலட்சம் மரங்களைக் கொண்டு போய் மண் மூட்டை கட்டி நாட்டியுள்ளார்கள். இதனால் வலைத் தொழில் செய்வோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு மரத்தோடு சேர்த்து சுமார் 20 தொடக்கம் 30 கிலோகிராம் மண்ணை சாக்குகளில் கட்டி மரத்தோடு சேர்த்து கடலில் போடுகிறார்கள். கடல் நடுவே ஆங்காங்கே காணப்படும் மணல் திட்டுக்களிலிருந்து இந்த மண்ணை அகழ்ந்தெடுக்கின்றார்கள். மீன்கள் வளரக்கூடிய இந்த இயற்கை மணல் மேடுகள் இவ்வாறு மணல் அகழப்படுவதால் காலப்போக்கில் இல்லாமல் போகும். கடல் அலைகளின் தாக்கம் வேகமாக கரைகளை நோக்கி மோதி கடலரிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு பல பாதிப்புக்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டி வரும். இவையெல்லாம் சட்டபூர்வமான முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாயின் இந்திய இழுவைப் படகுக் காரர்களின் அத்துமீறல்களும் கடல் வள அழிப்பும் நிறுத்தப்படல் வேண்டும். ஏனென்றால் ஒரு பக்கம் சட்ட விரோதமான கள்ளவழிமுறையும் எங்கிருந்தோ வந்தவர்கள் என் வீட்டுக்குள் வந்து அடாவடி செய்து கொண்டு போக என்னை மாத்திரம் எவ்வாறு சட்டம் ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு கோரமுடியும் என்று பாதிக்கப்பட்டுப் போயுள்ள மீனவர்கள் திரும்பத் திரும்ப நம்மிடம் கேள்வி எழுப்புகிறார்கள்.

இந்தியன் ரோலர்கள் சுமார் 200 கிலோகிராம் நிறையுள்ள இரண்டு இரும்புக் குண்டுகளை தமது படகின் இரு பக்கங்களிலும் கட்டி அவற்றை அதி வேகப்படகுகளில் இழுத்துச் செல்லும் போது அது பவளப் பாறைகளை உடைத்து நொறுக்கித் துவசம் செய்து விட்டுச் செல்கின்றது. இந்தப் பவளப் பாறைகள் தான் மீன்குஞ்சுகள் தங்கி வாழும் இடம். இது உடைத்து அழிக்கப்பட்டால் மீன்குஞ்சுகள் தங்கி வாழவே இடமில்லாமல் போகும். இந்தியன் ரோலர் வருகையை நிறுத்தினால் நமது வடபகுதிக் கரையோர சமுதாய மக்களின் வாழ்க்கை வளங்கொழிக்க ஆரம்பித்து விடும்.

எமது எதிர்கால மீன்வளத்தை, சூழலை, கடல் வளத்தைப் பாதுகாப்பதற்கு நாம் என்ன தடயங்களை நல்கினாலும் செய்திருந்த போதிலும்,

(தொடர்ச்சி 32 ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் புதிய பிரதேச செயலகம்

# அவசியமும் நெருக்கடியும்

-பிரகஸ்பதி-





**கல்முனை** தமிழ் பிரிவு பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீராசாஹிபினால் புறக்கணிப்பட்டு வருவதாக அண்மைக்காலமாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட வண்ண முள்ளன. இவ் விவகாரம் பற்றியே இக்கட்டுரை ஆராயவிருக்கிறது.

இந்த விடயத்தில் மூன்று இனத்த வர்களும் வாழும் பிரதேசம் என்றவகையில் கல்முனையின் முக்கியத்துவம் அதன் பின்னணி தமிழ் பிரதேச சபையின் முக்கியத்துவம், அவசியம் என்பவை பற்றி ஆராயவேண்டியது நல்லது என நினைக்கிறேன்.

மாநகர மேயர் கல்முனை தமிழ் பிரிவு பிரதேசங்களை புறக்கணித்து வருவதாக குற்றச்சாட்டுக்களை தற்போது வெளிப்படையாக முன்வைக்கும் கல்முனை மாநகர சபையின் எதிர்க் கட்சித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் பதவி வகித்த மேயர்கள் தமிழ் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நியாயமாக நடந்து கொண்டனர்.

குறிப்பாக முன்னாள் மேயர் மசூர் மௌலானா போன்றவர்கள் மிகவும் பெருந்தன்மையோடு செயற்பட்டனர். ஆனால், தற்போதைய மேயர் சிராஸ் மீராசாஹிப் கல்முனை தமிழ் பிரதேசங்களை அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது புறக்கணித்து வருகின்றார் எனக் குற்றம் சுமத்துகிறார்.

அதே நேரம் கல்முனை பிரதேசத்தில் சுமார் 06 லட்சம் ரூபாய் பெறுமதியான தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அப்படியாயின் கல்முனைப் பிரதேசத்தில் மூன்றிலொரு பங்கினராக வசிக்கும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு 02 இலட்சம் ரூபாய் பெறுமதியான தெரு மின் விளக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 75 ஆயிரம் ரூபாயளவான மின் விளக்குகள் கூட தமிழ் பிரதேசங்களுக்கு வழங்கப்படவில்லை. இவ்வாறு கூறுவதை வைத்துக் கொண்டு, நான் முஸ்லிம் பிரதேசங்களுக்கு அபிவிருத்திகள் மேற்கொள்வதை எதிர்ப்பதாக அர்த்தப்படுத்திவிடக் கூடாது.

முஸ்லிம் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளைப் போன்று தமிழ் பிரதேசங்களுக்குரிய அபிவிருத்தி பங்கினை வழங்க வேண்டும் என்றே கூறுகின்றேன். அடுத்தவரின் பங்கினைத் தட்டிப் பறிக்கவும் கூடாது, நமது பங்கினை விட்டுக் கொடுக்கவும் முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும். மேயர் சிராஸ் இவ்வாறு தொடர்ந்து தமிழ்ப் பிரதேசங்களை புறக்கணித்து வருவாரேயானால், இனி மாநகரசபையில் அவருக்கு நாம் எவ்விதமான ஒத்துழைப்புகளையும் வழங்கமாட்டோம் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதே நேரம் கடந்த மாத இறுதியில் கல்முனை தமிழ் பிரதேசத்துக்கான பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம். புஷ்பராஜா, எஸ். செல்வராஜா, எம்.எல். துல்கர்நயீம், கல்முனை மாநகரசபை எதிர்கட்சித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம், கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் கே.லவநாதன், கல்முனை மாநகர சபை ஆணையாளர் லியாகத் அலி மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் எனும் நிகழ்ச்சித் திட்டத்துக்காக நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன தனது வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 16 கிராமங்களுக்கென 16 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்தார். மேற்படி திட்டத்துக்கென கிழக்கு மாகாண அமைச்சர் டி. நவரட்ணராஜா 6 மில்லியன் ரூபாவினையும், கிழக்கு மாகாண உறுப்பினர் புஷ்பராஜா 3 மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவித்தனர். இவ் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது பிரதேசத்தின் கல்வி, சுகாதாரம், கலை, கலாசாரம் உள்ளிட்ட பிரிவுகளில் காணப்பட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

எப்படியிருந்தாலும் பிரதேசத்தின் பெரும்பாலான பராமரிப்புகள், அபிவிருத்திகள், மேம்பாட்டுத்திட்டங்கள் உள்ளூராட்சி சபைகளின் ஊடாகவே நடைபெறுகின்றமை வழமையானதாகும். அவ்வாறான வேளைகளில் அனைத்து இன மக்களையும் உள்வாங்கும் வகையில் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டு செல்லும் போது பாரபட்சங்கள் காட்டப்படாத நிலை ஒன்று உருவாகும். இதனையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர் என்பது உண்மையாகும்.

அதே நேரம் தமிழ் பிரதேசங்களை தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் பிரதேசங்களை முஸ்லிம் அரசியல்வாதிகளும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றோ, அல்லது ஒரு சமூகத்தினை மட்டுமே நாம் கவனத்தில் எடுக்கவேண்டும் என்றோ எண்ணம் தோன்றுமாயின் அது வீணான பிரச்சினைகளையே கொண்டுவர வாய்ப்பிருக்கிறது. இந்தக் கட்டுரையில் தமிழ், முஸ்லிம் என்ற வார்த்தைப்பிரயோகங்கள் தேவை கருதியே பயன்படுத்தப்படுகிறது. இதற்காக இவ்வாதத் தன்மை கொண்டதாக இல்லை என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

கல்முனை மாநகர மேயர் தமிழ் பிரதேசங்களை திட்டமிட்டு புறக்கணித்து வருவதாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் முன்னர் இந்தப் பதவியில் இருந்த முஸ்லிம் தலைவர்களை நல்லமுறையிலேயே நினைவுகூர்ந்திருக்கின்றமை யாவரும் அவரிடமிருக்கும் இனவாத பாரபட்ச தன்மையையே காட்டி நிற்கிறது.

இதே நேரம் எனது இறுதி மூச்சு இருக்கும் வரை இந்த கல்முனை மாநகரினை அபிவிருத்தி செய்தே தீருவேன். எனது அதிகாரத்தின் மூலம் எந்த இடைப்பாதுபாடும் பிரதேச வேறுபாடும் அற்ற ரீதியில் அபிவிருத்திகளை மேற்கொள்ள எத்தனிக்கிறேன் என்பதற்கு இப்பிரதேச தமிழ்மக்களே ஆதாரமாகும் என கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்துமிருக்கிறார்.

கல்முனை மாநகர சபை த.தே.கூ. உறுப்பினர் ஏ.அமிர்தலிங்கம், தனக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பத்திரிகையில் வெளியிட்டிருந்த செய்திகளுக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றின் போதே அவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

கல்முனை மாநகர முதல்வராகிய நான் இனவாதத்தை தூண்டுவதாகவும் தமிழ் பிரதேசத்தின் அபிவிருத்தியை திட்டமிட்டு புறக்கணிப்பதாகவும் த.தே.கூ. உறுப்பினர் ஏ.அமிர்தலிங்கம் பத்திரிகை அறிக்கை மூலம் குற்றம் சாட்டியிருக்கின்றார். இதன்மூலம் தமிழ், முஸ்லிம் உறவை சீர்குலைக்க அவர் எடுக்கின்ற முயற்சியாகவே இதனை நாம் பார்க்கின்றோம். கல்முனை மாநகர சபை உறுப்பினர் அமிர்தலிங்கம் சொந்த சுயநல அரசியலுக்காக எமது பிரதேச மூவின மக்களையும் பலிக்கடாவாக்கி, அரசியல் செய்ய வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் தமிழ் மக்களுடன் கொண்டுள்ள அன்புக்கு ஆதாரம் அவர்களது பிரதேச அபிவிருத்திகளை எனது முன்மொழிவுகளாகும்.

கல்முனை மாநகரினை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்ட அடிப்படையில் நான் செயற்பட்டு வருகின்றேன். அதற்கு மாநகர சபை உறுப்பினர்களும் எனக்கு பக்கபலமாக இருக்கின்றார்கள். நாங்கள் பாரிய அபிவிருத்தி வேலைகளை இனங்கண்டு வருகின்றோம். அதனை விரைவில் செயற்படுத்த எத்தனிக்கின்றபோது, இதனை சகிக்க முடியாத சில சுயநல, வங்குரோத்து அரசியல்வாதிகள் என்மீது அபாண்டமான பழியினை சுமத்த முற்படுகின்றார்கள். இதனைக் கண்டு பயந்து ஒதுங்கும் நிலையில் நானில்லை.

அரசியல் தெரியாமல் இந்த கதிரையில் நான் வரவில்லை. நான் 45 நாட்களில் அரசியலுக்கு வந்து- தேர்தலில் வெற்றியீட்டி தற்போது 4 மாத காலத்துக்குள் பாரிய முயற்சிகளை செய்து வருவதை பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் பத்திரிகைகளில் விடும் அறிக்கைகளினால் மட்டும் எனது சேவையை நான் நிறுத்திக்கொள்ளப் போவதில்லை. முடியுமாக இருந்தால் வேற்றுமைகளை மறந்து எல்லோரும் ஒன்றுபட்டு மாநகரங்களை நாம் கல்முனையை முன்னுதாரணமான மாநகர சபையாக மாற்றுவோம் என்றவகையில் மாநகர மேயர் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இந்த இடத்தில் கல்முனைத் தமிழ் பிரிவு பிரதேச செயலகம் உருவானமை குறித்த பின்னணியினை நாம் பார்த்தாகவேண்டும். அம்பாறை மாவட்டத்தில் 83 கலவரத்திற்குப் பிறகு அபிவிருத்தி, நிர்வாகம், அரசியல் ஆகிய விடயங்களில் ஒரு பலமான உறவினை மத்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட முஸ்லிம் அரசியல் தலைமைகள் முன்நிலைப்பட்ட தரப்பாக மாறியது. அதற்கான காரணம் அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தமை காரணமாகும்.

இதே நேரம் ஜனாதிபதி பிரேமதாச பிரதேச அபிவிருத்தி திட்டங்களை முன்வைத்தார். அவ்வேளையில் முஸ்லிம் சமூகம் இன ரீதியாகவும், வியாபார ரீதியாகவும் அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் தங்களது ஆளுகையைவைத்திருந்தனர் என்பதுடன் விளிம்பு நிலை சமூகமாகவும் மாற்றம் பெற்றனர்.

இப்படிப்பட்ட சூழலில் தமிழர்களின் நலனில் அக்கறை கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கவில்லை. ஏனெனில் தமிழர்களுக்கு அபிவிருத்தி, அரசியல், பொருளாதார ஆளுமைகள் இருக்கவில்லை. அத்துடன் கல்வி, விவசாயத் துறைகளிலேயே அவர்கள் ஆளுமையைப் பெற்றிருந்தனர்.

இதே நேரம் தமிழ் போராட்ட இயக்கங்கள் அதிகளவில் இருந்த காரணத்தினால் தமிழர்கள் தேசத்திற்கு விரோதமாக, முஸ்லிம்களுக்கு எதிராக என்ற வாறான குற்றச்சாட்டுகளும் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டன.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிமிசம் முதல் அடித்துக்கொண்ட மனசு நிதா சனம் அடைந்தது. நெஞ்சாரம் வழியே ஒரு புதுப்புனல் மலர்ந்திருந்தது குமரனுக்கு ஏன்? அவள் அருகில் இருக்கின்றாள் அல்லவா? அவள் சிரோமி யின் கண்களுக்குள் கண் மணியைப்போல் அவ்வளவு நெருக்கமானான். முகத்துக்கு முகம். இருவரும் விழிகளை சேர்த்து இமைகளை சிமிட்டிய வாறு வார்த்தைகளை விழுங் கியவர்களாக வெறுமைபட்டார்கள். சிரோமி பேச்சினூடே சென்றாள். நான் உங்களின் கவிதையைக் கேட்டதி லிருந்து அதற்கான அர்த்தம் புரியாமல் இரண்டு மூன்று நாட்களாக உறக்கத்தை இழந்து தவிக்கிறேன். குமரன் கையிலிருந்து ரோஜாவை வாங்கியவளாய் காதலோடு உரைத்தாள் குமரன் மனசுக் குள் நினைத்து கொண்டான். நான் உன்னை பார்த்த அந்த நொடிப் பொழுதிலிருந்து இரவையே மறந்து தவிக்கி றேனே நான் யாரிடம் சொல்ல..

என்ன குமரன் நான் உங்கிட்டதான் பேசுகிறேன். தோள் தட்டி அவன் சிந்தனையை கலைத்தாள் சிரோமி. என்ன குமரன் எங்கே பார்த்துக் கொண்டு இருக்கிறீங்க.

இல்லை.. ஒன்றுமில்லை மெல்லிய புன்னகையுடன் சாரி.. சிரோமி, மன்னிப்புடன் பணிவு காட்டினான்.

பரவாயில்லை. குமரன் மீண்டும் மன்னிப்புகளை மண்டியிட்டுக்கொண்டு மனதை திறந்தாள். சிரோமி உண்மையில் உங்களுக்கு ஒன்றும் புரியவில்லையா? இல்லை புரிந்தும் புரியாதது போல நடிக்கிறீங்களா? என்பதைப்பற்றி குமரனை கேட்கிறீங்க? என்று மீண்டும் எதுவும் புரியாதவள் போல் வார்த்தைகளை பராட்டா போல புரட்டி போட்டாள். ஒன்றும் தெரியாதவள் போல பட்டுண்டு வார்த்தைகளை அள்ளி வீசி விட்டு குமரன் முகத்தை பார்த்தாள். உடனே குமரன் நம் காதலைப்பற்றி என்றான். அவளுக்குள் அப்போதும் பிரிட்டாற்றும் எரிமலையாய் கண்களை சிவப்பாக்கிக் கொண்டாள். விருப்பத்தை வெறுப்பது போல.

ஏன் - சிரோமி மௌனமாக இருக்கிறீங்க? எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பரவாயில்லை. எடுத்துக்கோ.. நிலையில்லை விடுத்துக்கோ.. காத்திருப்பேன் நான் காத்திருப்பேன். நீ எனக்குத் தான் சிரோமி. நீ எனக்குத் தான் என்று கடற்கரையில் கூச்சலிட்டு மகிழ்ச்சியை கடலையோடு சேர்த்து நனைத்தான். சிரோமிக்கு சொல்ல முடியாமல் வாயடைத்துப்போனாள் அந்த வார்த்தையை இவ்வளவு சீக்கிரமாக குமரன் சொல்லுவான் என்று எதிர்பார்க்கவே இல்லை. பறவைகளே! கடல் மீன்களே! மனிதர்களே! என்று கீச்சிட்டு அவளும் தன் சந்தோசத்தை வெளிக்காட்டினாள்.

மரணம் இந்த நிமிடம் என்னை வந்து கைது செய்தாலும் கலங்கமாட்டேன் தயங்கமாட்டேன் கடவுளுக்கு நன்றி தூவியவளாய் அங்கிருந்து ஒரு சிறிய புன்னகையுடன் சென்றாள்.



# சுடுதல் தீர்ந்து போகாத நெருப்பு

03

கின்னியா ஜே.பிரோஸ்கான்

மறு நாள் புன்னகை நாளாய் தனக்குள் பிரகடனப்படுத்திக் கொண்டு குமரனை சந்திக்க சிரோமி குமரனின் கொலனுக்கு விரைந்தாள்.

மேகம் கற்கனை ஓட்ட மெடுத்தது. வெளிச்சம் கொஞ்சம்... கொஞ்சமாக மறைந்து இருளை பரிந்தது.

என்னது இன்று மழை நம் வீட்டுப் பக்கமாக தலை சாய்க்கிறது. இத்தனை மாதங் களாக நடக்காத ஒன்றாய் ஆதிசயத்துக் கொண்டான் குமரன்.

காற்றின் வேகம் ஜன்னலின் ஊடாக வீசியது. குமரன் தன் அம்மாவுக்காக எழுதி வைத்த மடலை அந்த மேஜை தொலைத்தது. அந்த அட்ட காச காற்றின் சன்னலோரம் சிதறின. மடல்தாள்கள் ஜன்னல் வழியாக சிறகு முளைத்து பறந்தன வெளியே.. மிகவும் வேகமாக மாடிப் படியை கடந்த குமரன் விரைந்து பார்த்தான். தன் முற்றத்து ரோஜாக்கள் அத்தனையும் தலை குனிந்து நின்றது. ஆச்சரியத்துடன் குமரன் நிமிர்ந்தான். விழிகளின் முன் சிரோமி... ஓ இது தான் இந்த மாற்றத்திற்கு காரணமோ? ஏய் ரோஜாக்களே பார்த்தீர்களா எத்தனை அழகு உம்மை விட இத்தனை நாளாக நீங்கள் தான் அழகு என்ற கர்வத்தில் என்னைப் பார்த்து ஏளனமாக சிரிப்பீர்களே! ஏன் இன்று தலை குனிந்து நிற்கிறீர்கள். உங்களை விட அழகு என்னவள் என்பதனை ஒப்புக்கொள்கிறீர்களா? என்று மனம் பேசுகிறது.

சிரோமியின் கடல் போன்ற விழிகளில் விழுந்து கொஞ்ச நேரம் நீச்சல் தெரியாமல் தத்தளித்தான்.

நாளாந்த சம்பளத்திற்காக வேலை பார்க்கும் ஒருவன் தன் முதலாளி விடும் தவறை சுட்டிக்காட்ட தயங்கும் பணியாளர் போல் பரிதவித்தான்.

வார்த்தைகளை வங்கியில் அடகு வைத்தவனாய் தயங்கினான். அவளை வரவேற்க வார்த்தையில்லாமல் தடுமாறினான். பாவம் காதல் அவர்களுக்கிடையில் சிக்குண்டு பரிதவிக்குது.

குமரன் உள்ளே வரலாமா? சிரோமி வார்த்தை தொடுத்தாள். நதி கடலில் கலப்பதற்கு கடலிடம் அனுமதி கேட்கலாமா? தேன் தேனருந்த மலரிடம் அனுமதி கேட்கலாமா? சிரோமி என்றான்.

ரொம்ப சந்தோசமாக இருக்கு சிரோமி என்றான். நான் எதற்காக என்று தெரிந்து கொள்ளலாமா? என்று சிரோமி கேட்க வாயடைத்துப்போனான் குமரன். ஒரு நீண்ட மௌனத்துக்குப் பிறகு சிரோமியை பார்த்து என்னைப் புரிந்து கொள்ள வில்லையா? அல்லது உனக்கு புரிந்துவிட்டது என்பது எனக்குத் தெரியவில்லையோ? நான் தலைவலிக்கு மருந்து கேட்டால் நீ அரிவாள் நீட்டுகிறாய் என நக்கலடித்தான்.

உனக்கு காதலைப் பிடிக்காதா சிரோமி? எனக்கா? காதல் பிடிக்கவில்லை என்றால் வாழ்க்கை பிடிக்கவில்லை என்றுதான் அர்த்தம் குமரன் எனக்கு ரொம்ப பிடிக்கும் என்றாள். காதல் ஒரு கவிதை போல சிரோமி. நீ அந்தக் கவிதை உருமாற்றம் செய்ய நினைக் கின்றாயோ அப்படியே மாற்றம் செய்யலாம். (தொடரும்...)

மின்சாரம் தடைப்பட்டு சில நிமிடங்களில் கதவு தட்டும் ஒலி கேட்டது. கண்ணன் மனசுக்குள் ஏதோ சங்கடமாகவே இருந்தது. குழந்தைகளைப் பார்த்தான். கொட்டை விட்டபடி வாசுகி யும் பக்கத்தோடு விழித்தாள். கண்ணன் கதவை மெல்ல நீக்கிப் பார்த்தான். ஏதோ குறைக் கேட்டது. அவ்வளவு தான். மூன்று நாட்களாகியும் எந்தப் பதிலுமே இல்லை. கண்ணன் உயிரோடு இருக்கிறானா? இல்லையா? யாரோடு போனான்? யாரை விசாரிப்பது. பொலிஸுக்குப் புகார் கொடுத்தும் எந்தப் பூனையையும் சந்தேகத்தில் பேரிலாவது கைது செய்ய வில்லை. கிராமமே ஏக்கத் தோடு தலை குனிந்தது. கண்ணன் வீட்டுக்குக் கண்ணீர்தான் சொந்தக் காரனாகியது. காலங்கள் கடந்தோடின பிரியாவும், சாலினியும் வயசுக்கு வந்து பெரிய பிள்ளையாகினார்கள். வாசுகி கையில் இருந்த கண்ணனின் சொந்தமான தாலிக்கொடியும் கைமாறிப் போனது. பக்கத்து வீட்டா ருக்கு விருந்து கொடுத்த தோடு நீராட்டு கொண்டாட்டமும் ஒப்பேறியது. தகப்பனில்லாத பிள்ளைகள் தான், ஆனாலும் படிப்பில் நல்ல கெட்டிக்காரிகள். வீட்டில் எத்தனையோ நாட்கள் அடுப்புக் கூட புகைந்த தில்லை. மீதிப் படிப்பை தொடராமைக்கான காரணம் கொடிய வறுமையே. "ஆண் துணை இல்லாத குடும்பம்" என்பதால் இரவு நேரங் களில் அடிக்கடி கதவு தட்டப்படும். கதவு தட்டப் படும் போதெல்லாம் வாசுகி கண்கள் தவணை முறையில் நனையும். கண்ணனின்



# துயர கீதம்

வி.மாலினி, நெடுங்கேணி-18.

ஞாபகத் தழுவலில். பிரியாவும் சாலினியும், படிச்ச அந்தப் பள்ளிக் கூடத்தில் பழைய மாணவர் சங்கத்தால் வெள்ளிவிழா கொண் டாடப்பட்டது. வீடு வீடாக ஏறி இறங்கி பணம் திரட்டுவதில் பிரியாவும், சாலினியும் முன்னின்று உழைத்தார்கள். விழா வின் போது பக்கத்தூர் பையன், ரமேஸ் வந்திருந்தான். ரமேஸ் ஒன்றும் பெரிய ஆள் இல்லை. அவனது ஊரில் கொஞ்சம் பணக்காரன். விழாவுக்கு வந்ததில் இருந்து பிரியாவுக்கு முன்னாலும் பின்னாலும் திரிந்தான். பிரியா எந்த பையன்களையுமே நிமிர்ந்து பார்க்காதவள். ரமேஸ் கொஞ் சம் பணக்காரன் என்பதால் பிரியாவின் கண்ணுக்குள் மாடி வீட்டுக் கனவுகள் ஊசலாடியது. மனசுக்குள் பட்டாம்பூச்சி சிறகடித்தது. ரமேசும் விடாப்பிடியாக முயற்சித்தான். நான்காவது நாளோடு பிரியா, ரமேசோடு ஓடிப்போனாள். பெண்புத்தி பின்புத்தி என்பதற்கு உதாரணமானாள்.

ரமேஸ் ஏற்கெனவே திருமணமானவன். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையும் கூட. பிரியாவுக்கு ரமேஸின் வேறு விம்பங்கள் எதுவும் தெரியாது பாவம் அறியாத பிரியா ஏமாந்து போனாள். ஊரார் உதடுகள் வாசுகியை வார்த்தைகளால் காறித் துப்பியது ரமேஸ் பிரி யாவைக் கூட்டிக்கொண்டு எங்கேயும் போகவில்லை. பக்கத்துத் தெருவிலேயே வாடகை வீட்டில் குடிபுகுந் தான். நான்கு மாதங்கள் சந்தோசமாக நகர்ந்தது. வேலை விசயமாய் ஊருக்கு போனதாய் போன ரமேஸ் மூன்று மாதங்களாகியும் எந்தத் தகவலுமே இல்லை.

பிரியாவின் கைக்குழந்தை பிச்சைகேட்கும் நிலைக்கு வந்தது.

வயிற்றில் குழந்தை யோடு இடுப்பில் தண்ணீர் குடத்தோடு நடு வெயிலில் தள்ளாடித் தள்ளாடி நகரும் பிரியாவை தாய் வாசுகி காண்கிறாள். பெற்ற மனசு சும்மாவா இருக்கும். மனசுக்குள் திட்டினாலும் வார்த்தைகளால் அணைத் துக் கொண்டு வாசுகி வீட்டுக்கு அழைத்துப் போனாள். இனிப் பேசி என்ன செய்வது ஆகவேண்டி யதைப் பார்ப்போம். எல்லாத்தை யும் கடவுள் தலையில் கொட்டினாள்.

சாலினிக்கு சம்மந்தங்கள் கேட்டு வந்தது. பிரியாவின் நிலை கண்டு ஒன்றுமே ஒத்துவர வில்லை. பிரியாவைக் காரணம் காட்டி சாலினியை ஊரார் பழி வாங்கினார்கள். சாலினியின் இதயமும் சோக கீதம் இசைத்தது.

பிரியாவுக்கு பிரசவ வேதனை. "ஆண் துணை இல்லாத குடும்பம்" ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக எவருமே இல்லை! கடவுள் கருணையால் வீட்டிலேயே நல்லபடியாக பிரசவம் முடிந்தது.

அழகான பெண் குழந்தையே பிரசவ மாகியது. பாவம் ஆண் துணையே இல்லாத குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழி



எப்போதும் விரிந்து கொண்டே இருப்பதுதான் வாழ்க்கை ஆகும். சுருங்கிவிடுவது மரணம் தான். தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக் கொண்டு சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்திலும்கூட இடம் இல்லை.

**சிந்தியா! அமெரிக்காவின் பிரேரணை, சனல்–4 இவை இரண்டும் அரசுக்குப் பெரும் நெருக்கடியாக உள்ளது. இது பற்றி உமது கருத்து என்ன?**
பி. ராஜேந்திரம், கொழும்பு-12

▲ சனல் 4 விவகாரம் இலங்கைக்கான நெருக்கடிகளின் ஆரம்பமாக இருக்கின்றது. அமெரிக்காவின் தீர்மானம் எதிர் பார்த்ததைவிட நெருக்கடிகளைக் கொண்டதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதேச நாடுகளுடன் முட்டிக் கொள்வதைவிட இலங்கையில் தமிழ் மக்களுக்கு தீர்வொன்றை வழங்கி நிரந்தர நிம்மதியைத் தேடிக் கொள்ளலாம் என்று அவதானிகள் கூறுகின்றார்கள். இவ்வாறான நெருக்கடிகளைத் தீர்க்காமல் தொடரச் செய்வதானது இலங்கையின் தலையிடியை நீடிக்கச் செய்யும்.

**சிந்தியா! முல்லைத்தீவில் நடைபெறவுள்ள தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதே. அவ்வாறு நடைபெற சாத்தியம் உண்டா?**
ஜி. கணேசமூர்த்தி, கிளிநொச்சி.

▲ அவ்வாறானதொரு செய்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார். அரசாங்கத்தின் சார்பில் அவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தேர்தல் நடைபெற வேண்டுமா? இல்லையா? என்பதை தீர்மானிக்கின்றவர்கள் அரசு அல்ல. தேர்தல் ஆணையாளரே அதைத் தீர்மானிக்கின்றார். இந்த நிலையில் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெற வேண்டுமாக இருந்தால் வடக்கின் அத்தனை உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களும் நடைபெற்றிருக்க வேண்டும். அந்தவகையிலேயே புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று தேர்தலும் நடைபெறுவதாகக் கருதலாம்.

**சிந்தியா! ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இம்முறை கிண்ணம் எந்த அணி வசமாகும்?**
ஜி. பிரேம்குமார், பருத்தித்துறை.

▲ பொதுவாக ஆசிய அணிகள் மோதும்போது அதில் எந்த அணி கிண்ணத்தை வெல்லும் என்று உறுதிபடக் கூறிவிட முடியாது. ஏனெனில், ஒவ்வொரு அணிகளும் எதிரணியின் பலம், பலவீனத்தை நன்கு புரிந்து கொண்டிருப்பது இதற்கு முக்கிய காரணமாகும். இலங்கை அணியைப் பொறுத்து, மிக நீண்ட இடைவேளைக்குப் பின்னர் நம்பிக்கை தரும் வகையில் அதன் துடுப்பாட்டம் அமைந்துள்ளது. அந்த வகையில் ஆசியாவில் இன்னொரு அவுஸ்ரேலிய அணிக்கு ஒப்பாக தெரியும் இலங்கை அணி ஆசியக் கிண்ணத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது.

**சிந்தியா! ரஜனியின் கோச்சடையான் எந்திரனின் வசூலை ஓவர்ரைக் பண்ணுமா?**
சி. றதீஸ், நீர்வேலி.

▲ ரஜனிகாந்தின் திரைப் படங்கள் வசூலில் சாதனை படைப்பது புதுமையான செயல் அல்ல. எந்திரனின் சாதனை என்பதை விடவும் ரஜனியின் படங்கள் ஒவ்வொன்றும் சாதனை படைப்பவை.

**சிந்தியா! சுயநலமில்லாத மனிதர்களே கிடையாதா?**
எ. வாணி, வாகரை.

▲ கிடையாது! சுயநலம் இருக்க வேண்டியதுதான். அடுத்தவர் நலத்தைக் கெடுக்காத அளவிற்கு இருக்கும் வரை பாதகம் இல்லை. கடவுள் ஒரு நாள் பூமிக்கு வந்து ஒரு வீட்டுக் கதவைத் தட்டினார். வீட்டுக்காரன் வெளியே வந்து பார்த்தான். கடவுளைப் பார்த்ததும் ஒரு கும்பிடு போட்டான். கடவுள் அவனிடம் உனக்கு விரோதி யாரப்பா என்றுகேட்டார். அடுத்த வீட்டுக்காரன்தான் விரோதி என்றான். என்ன காரணம் அப்பா? "அவன் எப்போதும் சந்தோஷமாக இருக்கின்றான். அப்படி என்னால் இருக்க முடியவில்லை" என்றான் அவன். கடவுள் சொன்னார்




"சரி உன்னையும் சந்தோஷமாக இருக்கச் செய்கிறேன். என்ன வரம் வேண்டுமோ கேள். நீ கேட்டது உடனே கிடைக்கும். ஆனால் ஒரு நிபந்தனை. உனக்கு என்ன பலன் கிடைக்கிறதோ அதைப் போல இரண்டு பங்கு உன் பக்கத்து வீட்டுக் காரனுக்குக் கிடைக்கும்" என்றார். கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு வரம் கேட்டான். "கடவுளே எனக்கு ஒரு கண் தெரியாமல் போகணும்".




**சிந்தியா! மனிதன் செய்யும் தவறுகளில் பெரும் ஏமாற்றம் தரும் தவறு எது?**
எம். சுரேஷ், திருகோணமலை.

▲ ஒருவன் தன்னை மட்டுமே புத்திசாலி என்று நினைக்கின்றான். அதுதான் அந்தத் தவறு.

**சிந்தியா! தர்க்க வாதம் என்றால் என்ன?**
பி. யாழினி, மட்டக்களப்பு.

▲ கடைத் தெருவில் ஒரு பொருள் திருடியதற்காக ஒருவனைப் பிடித்தார்கள். அவனிடம் கள்ள நோட்டும் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு குற்றங்களுக்காகவும் வழக்குத் தொடுத்தனர்.

அவனது சட்டத் தரணி சொன்னார் "அவன் திருடியது உண்மை. ஆனால், பொய் நோட்டு வைத்திருந்த குற்றம் மட்டும் இவன் மீது சுமத்த முடியாது" என்றார் சட்டத் தரணி.

"எப்படிச் சொல்கிறீர்கள்?" "அவன் திருடியதை எடுத்துக் கொண்டு விட்டான். திருடும்போது நல்ல நோட்டா அல்லது பொய் நோட்டா என்று எப்படிப் பார்க்க முடியும்" என்று கேட்டார் சட்டத்தரணி.

இதுதான் சட்டவாதம்.

# உன்னை அறி

உள்ளத்தில் எழும் ஆசைகளை அடக்கி, ஐம் புலன்களையும் அவை செல்லும் போக்கிற்குச் செல்லவிடாமல் தடுத்து, தன் வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமக்கும் தன் குடும்பத்தினருக்கும், தனது உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பயன்பட வாழ்பவர்களே உண்மையான மனிதர்களாவர். அப்படி வாழாது தமது இன்பத்திற்காகத் தீமைகளைச் செய்வோர், விதைத்தானியங்களால் உண்டாகும் பயன்களை அறியாது அவற்றைத் தீயிலிட்டு அவித்துண்டவர்களாவர். பயனை எதிர்பாராது பிறருக்குதவி செய்து வாழ்வதே உடலைப் பெற்ற தன் பயனாகும். அதை உணராதவர்கள் தமக்கும் தீமை செய்து பிறருக்கும் தீமை செய்து வாழ்கிறார்கள்.

வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமானால், முதலில் தன்னை முழுமையாக அறிதல் வேண்டும். தன்னை அறிந்தவன் உலகை அறிந்து கொள்வான். உலகை அறிந்து கொண்டவன் தனக்கும், மற்றவர்களுக்கும் பயன்பட வாழ்வான். தன்னை அறிந்தவன் தவவாழ்வு வாழ்கிறான் தன்னை அறியாதவன் அவலவாழ்வு வாழ்கிறான்.

வாழ்க்கை என்பது துன்பமானது ஒருவன் தனது வாழ்க்கைத் துணையைத் தேடுமுன், வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ளல் வேண்டும். வாழ்க்கையைச் சுமை என்று நினைப்பவர்கள் வாழ்க்கையைத் தொடங்குமுன் சிந்திக்க வேண்டும். சிந்திக்காது திருமணம் செய்து விட்டுத் தமது உடல் இன்பத்திற்காகத் தீய செயல்களைச் செய்தால் ஒரு குடும்பம் மட்டும் பாதிக்கப்படாது. சமூகமே பாதிக்கப்படும். தன்னை அறியாதவர்களால்தான் இன்று உலகம் கெட்டழிகிறது.

ஒருவன் பெரும் கல்வி அறிவாளனாக இருக்கலாம். அவன் கற்ற கல்வி ஆக்கத்திற்குப் பயனாகவில்லையென்றால், அவன் கற்ற கல்வியால் என்ன பயன்? கல்வி வெறும் தத்துவங்களில் இல்லை. கோட்பாடுகளிலும் உளவியல் தத்துவங்களிலும் இல்லை. நடைமுறையில்தான் உள்ளது. நடைமுறை என்பது தன்னைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வது. தன்னை அறியாதவன் உலகை அறியான்.

இயற்கையை நாம் நிறக்கண்ணாடிகள் அணிந்து பார்த்தால் நிறக்கண்ணாடிகள் உண்மையை உணர்த்தாது. அதேபோல் நீ பிறரை உனது எண்ணப்படி பார்த்தால் அவர்களைப் புரிந்து கொள்ள முடியாது. அதனால் உன்னை நீ பார். உன்னை நீ பார்க்க வெளிவேஷங்கள் தேவையில்லை. உன்னை உனக்குப் புரியும். உன்னை உனக்குப் புரியாவிட்டால் உனக்கு ஏதோ கோளாறு இருக்கிறது.



## இலக்கிய நயம் 69

கே.வி. குணசேகரம்

நாவலூரில் கலைவாணன் என்றொரு கற்றவர் இருந்தார். அவர் கற்றபடி நடப்பதில்லை. மனம் போனபடி நடப்பவர். அவர் தனது மனைவி, பிள்ளைகளைக் கவனிப்பதில்லை. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது தெருவில் திரிந்தனர். பெற்றோர், அயலவர், நண்பர்கள் அவருக்குப் புத்திமதிகள் கூறிக் களைத்து விட்டனர். அவர் நன்றாகக் குடிப்பார். குடிக்கக் காசில்லாவிட்டால் வீட்டில் உள்ள பொருட்களைத் திருடுவார்.

வெளிநாட்டிலிருந்து அவரது நண்பன் வந்தான். இருவரும் ஒன்றாகக் குடித்தனர். நண்பன் அவரது பிள்ளைகளின் பெயரில் வங்கியில் பணவைப்புச் செய்தான்.

ஒரு நாள் இருவரும் பட்டணத்திற்குச் சென்றனர். அங்கே ஒருவன் அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்களை விற்பனை செய்தான். முதற்பரிசு இருபத்தைந்து இலட்சம் எனக் கூவி விற்றான். கற்றவரின் நண்பன் ஓர் அதிர்ஷ்ட லாபச்சீட்டை வாங்கிக் கலைவாணனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னான், அதிர்ஷ்டமிருந்தால் உனக்குக் கிடைக்கும்.

எனக்கு அதிர்ஷ்டமில்லை. நூறு ரூபாவைத் தந்தாயானால் நான் குடித்திருப்பேன் என்றார்.

மறுநாள் குடிப்பதற்குக் கலைவாணனிடம் பணம் இருக்கவில்லை. அவன் நண்பன் வாங்கிக்கொடுத்த அதிர்ஷ்டலாபச்சீட்டை யாரோ தெருவில் சென்றவனுக்கு ஐம்பது ரூபாவிற்கு விற்று விட்டு மது அருந்தினான்.

மறுநாள் கலைவாணனின் நண்பன் பத்திரிகையுடன் வந்து சொன்னான், கலைவாணா, உனக்குத்தான் முதற்பரிசு விழுந்திருக்கு. வா வங்கியில் சென்று பணத்தை எடுப்போம்.

கலைவாணன் திகைத்துப்போனான். இத்தகைய நிகழ்வைப் பற்றி 2000 ஆண்டுகளுக்கு முன் அறவணார் என்ற புலவர் பாடிய அருமையான பாடல் இது

**"அடங்கி அடப்ப ஐந்தினைக் காத்துத்**
**தொடங்கிய மூன்றினால் மாண்டவண்டு**
**செல்லும் வாய்க்கேமம் சிறுகாலைச் செய்யாரே**
**கொள்ளிமேற்கொட்டு வைத்தார்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



## அழகான இராட்சசி

Attacus என்று அழைக்கப்படும் உயிரினம் உலகின் மிகப் பெரிய உயிரினமாகும். இவ் உயிரினமானது இந்தியாவின் இமாலயப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பூச்சி இனங்களில் மிகப் பெரியதாக காணப்படுகிறது. இந்த உயிரினத்தின் இறக்கை ஒன்று 25 சென்ரிமீற்றர்கள் நீளமானதாக உள்ளது. வண்ணத்துப்பூச்சி போன்ற வடிவில் தோற்றமளிக்கும் இந்த இராட்சத உயிரினமும் 2 வாரங்கள் மட்டுமே உயிர்வாழும்.





## ஆசை ஆசையாய்...

குழந்தைகள் இல்லாத பெண் ஒருவரின் வினோதமான ஆசையைப் பார்த்தீர்களா? குழந்தைகள் இல்லாத குறையைப் போக்க பெண் ஒருவர் 97 பிளாஸ்டிக்கிலான குழந்தைகளை 20,000 ஸ்டேர்லிங் பவுண்கள் செலவழித்து வாங்கி வைத்துள்ளார். Vikki Andrews என்ற 19 வயதுப் பெண்ணுக்கு கருப்பையில் பிரச்சினை இருப்பதை மருத்துவர்கள் அறிவித்ததால் தான் மேற்படி முடிவை எடுத்தார் குறித்த பெண். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சேகரிக்கத் தொடங்கிய குழந்தை பொம்மைகள் தற்போது 100ஐ எட்டியுள்ளன. அவரின் படுக்கையறை முழுவதும் குழந்தை பொம்மைகளால் நிறைந்துள்ளன.

பகுதி நேரம் மட்டுமே வேலை செய்யும் குறித்த பெண் 200 ஸ்டேர்லிங் பவுண்களைச் செலவழித்து தனது முதலாவது குழந்தை பொம்மையை வாங்கியுள்ளார். ஆனால் குறித்த பெண்ணின் வருங்காலக் கணவனுக்கு இப்படியான குழந்தை பொம்மைகள் மீது எவ்வித ஆர்வமும் இல்லையாம்.



## குட் 'க்ளிக்'


இது ஒரு எதிர்பாராத நிகழ்வுதான். ஆம், இந்த சீல் ஒரு அதிர்ஷ்டசாலி தான். அதையும்விட இந்தப் படத்தை எடுத்த புகைப்படப் பிடிப்பாளருக்கு இந்த ஆண்டுக்கான சிறந்த படத்துக்கான விருது கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது


சுறாவின் வாயிலிருந்து சில அங்குல இடைவெளியில் அதாவது சுறாவின் மூக்கில் சீல் இருக்கின்றது. பலவாறாக தப்பிக்க சீல் முயன்று இறுதியில் கடலில் பாய்ந்து தப்பித்தும் விட்டது.

ஒரு வழியாக பெரிய வெள்ளைச் சுறா வின் மதிய உணவுக்கு விருந்தாகாமல் சீல் தப்பித்து விட்டதாக கூறுகின்றார் இந்த படத்தை எடுத்த புகைப்படப் பிடிப்பாளர். குறித்த புகைப்படமானது தென்னாபிரிக்காவின் வனவிலங்கு புகைப்படப் பிடிப்பாளரான Chris Fallows என்பவரால் எடுக்கப்பட்டுள்ளது.

தத்ரூபமாகப் படம்பிடித்த இந்தப் புகைப்படப் பிடிப்பாளர் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர். குறித்த கடற்பகுதியில் 64,000 சீல் விலங்கினங்கள் இருப்பதாகவும் இவற்றை ஒரு குழுவாக சேர்ந்து சுறாக்கள் வேட்டையாடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







## ஏறு மனமே ஏறு...

பல்வேறுவகையான விளையாட்டுக்களில் மலையேறுவதும் அதிகளவான ரசிகர்களால் வரவேற்கப்படும் விளையாட்டாகும்.

மலையேறுவதும் அதிகளாவான ரசிகர்களால் வரவேற்கப்படும் விளையாட்டாகும். இவ்விளையாட்டிற்கு பயிற்சி எடுப்பதற்கென நெதர்லாந்தில் மிக உயரமான சுவர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரமானது 121 அடிகள் ஆகும்.

எக்சாலிபர் என்று 2004ஆம் ஆண்டு பெயரிடப்பட்ட இக்கட்டடமானது நெதர்லாந்தில் க்ரோனின்ஜென் என்ற என்ற இடத்தில் ஜெட் கான்டீர்சீன் என்பரால் கட்டப்பட்டது. ஓரளவிற்கு இலகுவாக ஏறக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட இந்த சுவரில் ஏறுவதற்கு அதிகளவான மலையேறும் வீரர்கள் இங்கு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## புது முயற்சி...

பெரும்பாலான வீடுகளில் தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன்னால் சிறுவர்கள் மிகவும் ஆர்வமாக கேம்ஸ், கார்ரேஸ், கார்ட்டூன் போன்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை அதிகமாக காணலாம். அதிலும் கார் ரேஸ் மிகவும் விறுவிறுப்பானதாகவும் ஆபத்து நிறைந்த ஒரு விளையாட்டாகவும் காணப்படுகின்றது. கரணம் தப்பினால் மரணம் என்பது போல் தான் போட்டி அமைகின்றது. அண்மையில் அமெரிக்காவில் புதியரக ரேசிங்கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் வேகமாக செல்லக்கூடிய வகையில் அது தயாரிக்கப்பட்டுள்ளது. பல புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்தக் கார் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org